Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 28 செவ்வாய்க்கிழமை (12.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :228

### திருமலைத் தாக்குதலால் சீற்றம்

# போரைத் திணிக்க அரசு முயற்சி

# பொறுமை காப்பது அசாத்தியம்!

## பொங்குகிறார் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுவுக்குக் காட்டமான கடிதம்

கிளிநொச்சி,ஜூலை12



**திருகோணமலை உப்புவெளிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல் புலிகளின் தலைமையைச் சீற்றம் கொள்ள வைத்திருக்கின்றது.**

**இது போரைத் திணிக்கும் அரசின் முயற்சி என்ற சாரப்பட விமர்சித்திருக்கும் விடுதலைப் புலிகள், இப்போக்கைப் பார்த்துக்கொண்டு தொடர்ந்தும் பொறுமைகாப்பது சாத்தியமற்றது எனத் தெரிவித்திருக்கின்றார்கள். இதுதொடர்பாகப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தங்களது கடுஞ்சீற்றத்தை வெளிப்படுத்தும் விதத்தில் நேற்று முன்தினமே போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.**

திருமலையில் எமது போராளிகள் மீதான தாக்குதல் அப்பட்டமான போர்நிறுத்த மீறல். - என்ற தலைப்பில் அனுப்பிவைக்கப்பட்ட இக்கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-

இன்று(ஞாயிறு) காலை 10.45 மணியளவில் திருமலை உப்புவெளிப் பிரதேசத்தில் எமது போராளிகள் தங்கியிருந்த இடத்தின் மீது தாக்குதல்நடத்தப்பட்டுள்ளது. W.P.2049 என்ற இலக்கத்தைக் கொண்ட வெள்ளை நிறமுடைய ஹயஸ் வாகனத்தில் வந்த - ஏழுக்கும் மேற்பட்ட ஆயுதம் தரித்த - நபர்கள் குறிப்பிட்ட பிரதேசத்தை நோக்கிக் கைக்குண்டு ஒன்றை வீசியதுடன், எமது போராளிகளையும் அவர்களுடன் இருந்த பொதுமக்களையும் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவத்தின்போது முக்கிய போராளி டிக்கான் உட்பட இரண்டு போராளிகளும் இரண்டு பொதுமக்களும் கொல்லப்பட்டனர். ஒருவர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் இப்போராளிகளை எச்சரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக எமது போராளிகள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்ட பின்னர், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அது குறித்துக் கண்காணிப்புக் குழுவினருக்கு முறையிட்டிருந்தமை தெரிந்ததே. வழமையான கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் அரச ஆயுதப் படையினர், அவ்விடத்தைவிட்டு அகன்று சென்ற சிறிதுநேரத்தின் பின்னர்தான் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலை நடத்திய

(14ஆம் பக்கம் பார்க்க)

## முத்தலிப் படுகொலை சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜராவர்

கொழும்பு,ஜூலை12

இராணுவப் புலனாய்வுப்பிரிவின் லெப். கேணல் முத்தலிப் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் நால்வரை எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜராக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் அமாலி ரணவீர, சிறைச்சாலைகள் ஆணையாளருக்கும், இரகசியப் பொலீஸாருக்கும் நேற்று உத்தரவிட்டார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களான ஈ.டபிள்யூ.ஏ.சஞ்ஜீவ, ஆறுமுகம் செந்தில்குமார் அல்லது ராஜன், ராஜரட்ணம் சரஸ்வதி அல்லது உமா, ஏ.ஆர். கருணாரட்ன அல்லது அனுர ஆகியோரை விசேட பாதுகாப்புடன் மன்றுக்கு அழைத்து வருமாறு நீதிவான் பணிப்புரை விடுத்தார்.

சம்பவத்தின் முக்கியமான சந்தேக நபரான பத்திரிகையாளர் சஞ்ஜீவவிடம் இருந்து 51-9500 என்ற இலக்கமுடைய வாகனம்

(14ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர் இன்று இல்லை

வழக்கமாக செவ்வாய்க்கிழமைகளில் உதயனுடன் வெளிவரும் - 5ஆம் தர புலமைப்பரிசில் மாணவர்களுக்கான - கல்விச் சுடர் தவிர்க்கமுடியாத காரணங்களினால் இன்று வெளியிடப்படவில்லை. அதனை நாளைய உதயனுடன் பெற்றுக்கொள்ளலாம்.

### பயணப் பாதுகாப்புச் சர்ச்சை:

## புலிகளின் காலக்கெடுவுக்கு அரசுத் தரப்பிலிருந்து பதில்!

### இன்று கண்காணிப்புக்குழு ஒப்படைக்கும்

கொழும்பு,ஜூலை12

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் பயணம் செய்யும்போது அவர்களுக்கான பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் அரசின் பதில் நேற்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டிற்கும் அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிற்குமிடையே நேற்றுக்காலை ஒன்றரை மணிநேரப் பேச்சு இடம்பெற்றது.

இந்தப் பேச்சின்போதே தனது பதிலை அரசுத்தரப்பு தெரிவித்திருக்கிறது.

போராளிகளின் போக்குவரத்துப் பாதுகாப்புக் குறித்து விரிவாக இந்தச் சந்திப்பின் போது பேசப்பட்டதாகவும், இது தொடர்பில் விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதற்கு செய்தியொன்றை அரசு தந்திருப்பதாகவும்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் முடிகிறது ஐ.தே.க. எழுச்சி யாத்திரை இன்று இறுதிநாளில் 10 லட்சம் பேர் திரள்வராம்!

கொழும்பு,ஜூலை12

ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடம் டிசெம்பர் மாதம் நடத்துமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சி கடந்த இரண்டாம் திகதி மாத்தறை, தேவேந்திரமுனையில் இருந்து ஆரம்பித்த மக்கள் எழுச்சிப் பாதயாத்திரை இறுதி நாளாக இன்று கொழும்பை வந்தடையவுள்ளது.

10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்த எழுச்சிப் பாதயாத்திரையின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றுகாலை 11.30 மணியளவில் தெஹிவளையில் ஆரம்பமாகும் இந்தப் பாதயாத்திரை, காலி வீதியினூடாக வந்து லிபேர்ட்டி

(14ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் வித்துடல்களுக்கு திரண்டு வந்து மக்கள் அஞ்சலி

திருகோணமலை,ஜூலை12

திருகோணமலை மாவட்டம் செல்வநாயகபுரத்தில் விடுதலைப் புலிகளின் அலுவலகம் தாக்கப்பட்டு, போராளிகள் உட்பட நால்வர் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று முழுநாளும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. இன்று பூரண கதவடைப்பு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

துக்கதினத்தை முன்னிட்டு வீதிகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. மஞ்சள், சிவப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. அனைத்து நடவடிக்கைகளும் அமைதியுடனும் சோகத்துடனும் இடம் பெற்றன.

உயிரிழந்த போராளிகளின் வித்துடல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழிலும் துக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

திருகோணமலையில் போராளிகள் உட்பட நால்வர் படுகொலை செய்யப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து நேற்று யாழ். மாவட்டத்திலும் முழு அளவில் துக்கம் கடைப்பிடிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள், வாகனங்கள் என்பவற்றில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததுடன் வாழைகளும் கட்டப்பட்டிருந்தன. யாழ். பஸ்நிலையம் உட்பட பல இடங்களில் ஒலிபெருக்கி மூலம் சோக கீதமும் இசைக்கப்பட்டது. (எ-3-8)

## ஆஸ்பத்திரிக்குள் செய்தி சேகரிப்பதற்கான நடைமுறைகளைப் பணிப்பாளர் அறிவித்தார்

யாழ்ப்பாணம்,ஜூலை12

செய்தியாளர்கள் யாழ். போதனா மருத்துவமனைக்குள் சென்று செய்தி சேகரிப்பதற்கான நடைமுறை ஒழுங்குகளை மருத்துவமனை நிர்வாகம் நேற்று அறிவித்திருக்கின்றது.

செய்தியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் அடங்கிய கடிதம் ஒன்றை மருத்துவமனையின் பணிப்பாளர் சு.ரவிராஜ் உதயனுக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்.

அந்த நடைமுறை விவரம் வருமாறு:-

வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரங்களில் பத்திரிகை நிருபர்கள் விடுதிகளுக்கு அனுமதியின்றி செல்ல முடியும். புகைப்படக் கருவி கொண்டு செல்வதானால் முன் அனுமதி பெறுதல் வேண்டும். நோயாளர்கள் பார்வையிடும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வைத்தியசாலை விடுதிகளுக்குச் செல்லவேண்டி ஏற்

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

மேல் கொத்மலைத் திட்டத்துக்குக் கேள்வி மனுக் கோரல்:

# அமைச்சரவையில் வாளாவிருந்த பின் வெளியில் வந்து நின்று எதிர்ப்பது ஏன்?

## முத்து சிவலிங்கத்தைச் சாடுகிறார் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு,ஜூலை12

மேல்கொத்மலை நீர்மின் திட்டம் தொடர்பிலான கேள்வி மனுக்களைக் கோருவது குறித்து அமைச்சரவை ஆராய்ந்தபோது இ.தொ.காவின் அமைச்சர் முத்து சிவலிங்கமும் அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்தார். அவரும் அதற்கு அனுமதி வழங்கியதாகவே அர்த்தம். இப்போது இந்தக் கேள்வி மனு தொடர்பில் இ.தொ.கா. எதிர்ப்பைத் தெரிவிப்பது புரியாமல் இருக்கிறது.

- இவ்வாறு நேற்று உதயனுக்கு உறுதியாகக் கூறினார் மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த. மேல் கொத்மலை நீர்மின் திட்ட கேள்வி மனுக்கோரல் தொடர்பில் இ.தொ.கா. தெரிவிக்கும் ஆட்சேபனை குறித்துக் கருத்துக் கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

இந்தக் கேள்வி மனுக்கோரல் குறித்து அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்ட போது அமைச்சர் முத்து சிவலிங்கமும் அமைச்சரவையில் இருந்தார். ஆனால், அப்போது எதிர்ப்புக்கள் எதனையும் அவர் தெரிவிக்காத காரணத்தினால் அந்த முடிவின்படி கேள்வி மனுக்களைக் கோரினோம். இப்போது இ.தொ.கா. இதுவிடயத்தில் தனது எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றது. இந்த விடயம் குறித்து என்னுடன் பேச்சு நடத்த வேண்டுமென அமைச்சர் முத்து சிவலிங்கம் கோரினார். இன்று(செவ்வாய்க்கிழமை) அந்தப் பேச்சுகள் நடைபெறும். இ.தொ.கா. முன்வைக்கும் விடயங்களை நாம் கவனத்தில் கொள்வோம் -

- இவ்வாறு அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேலும் கூறினார். (எ-க)

# நாய் களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜூலை12

நல்லூர் பிரதேச சபைப் பகுதிக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இன்று செவ்வாய்க் கிழமையும் நாளை புதன்கிழமையும் தடுப்பூசி போடப்படவுள்ளது.

தடுப்பூசி போடப்படவுள்ள நாள், நேரம், இடங்களின் விவரம் வருமாறு:-

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் நந்தாவில் மனோன்மணி சனசமூக நிலையம், முற்பகல்10.30 மணிக்கு கொக்குவில் பொற்பதி நேதாஜி சனசமூக நிலையம், பிற்பகல் 12.45 மணிக்கு கொக்குவில் கிழக்கு சம்பியன் வீதி, வளர்மதி சனசமூக நிலையம் -

நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் கிழக்கு பிரம்படி சனசமூக நிலையம், முற்பகல் 10.30 மணிக்கு கொக்குவில் தபால்கந்தோர் ஒழுங்கை இந்திரா சனசமூக நிலையம், பிற்பகல் 12.45 மணிக்கு ஆடியபாதம் றோட், வை.எம்.எச்.ஏ. மண்டபம்.

# செல்வநாயகபுரம் படுகொலை; கொடூரமான படை நடவடிக்கை

## வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

திருகோணமலை செல்வநாயகபுரம் படுகொலை ஸ்ரீலங்காப் படையினரின் மிகக் கொடூரமான படை நடவடிக்கை. சர்வதேச சமூகத்துக்கு இதனைத் தெரியப்படுத்துகின்றோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது வடமராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை.

இதுவிடயமாக மேற்படி பேரவை விடுத்துள்ள அறிக்கையில் :-

தமிழினத்தின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் ஓர் இனத்தின் விடுதலைக்காக உழைக்கும் உன்னத போராளிகள் என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளதுடன், எமது போராட்டத்தின் உண்மைத் தன்மையையும் நியாயத் தன்மையையும் நன்கறிந்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று வருடங்களைத் தாண்டிய வேளையிலும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்வை அடையாத சூழலிலும் படையினரும் அவர்களுடன் சேர்ந்த சமூகவிரோதக் கும்பல்களும் எமது போராளிகளையும் புத்திஜீவிகளையும் ஊருக்கு உண்மையான நீதித் தன்மையுடைய கருத்துக்களைக் கூறி வந்த ஊடகவியலாளர்களையும் திட்டமிட்டுக் கொலை செய்துவந்த நிலையிலும் எமது தேசியத் தலைமையும் மக்களும் பொறுமையுடன் இருந்து வந்துள்ளார்கள்.

ஸ்ரீலங்கா இராணுவம் வலிந்து எமது தமிழீழ விடுதலைப் புலிகளைப் போருக்கு இழுக்க முனைந்த வேளையில் எல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுமையுடன் இருந்து வந்துள்ளமையை சர்வதேசம் உணர வேண்டும்.

தமிழர் தாயகத்தின் தலைநகராம் திருகோணமலையில் இரவோடு இரவாக புத்தர் சிலை வைத்து இனவாதத்தைத் தூண்டிப் போரை வலிந்து தொடக்க முனைந்தும் கூட பொறுமையின் உயர் நிலையை தமிழினம் கடைப்பிடித்து வந்துள்ளது.

அதே தலைநகரின் செல்வநாயகபுரத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமது பாதுகாப்பிற்காகவேனும் ஆயுதமற்ற சூழலில் அரச பண்ணை விடுதியில் தங்கியிருந்த திருமலை மாவட்ட கடற்புலிகளின் தளபதி டிக்கான், பயிற்சி ஆசிரியர் குமரன் மற்றும் இருவருமாக நால்வரை முற்கூட்டியே திட்டமிட்டு அவர்கள் இருந்த இடத்துக்குள் புகுந்து கொலைசெய்துள்ள அரச படைகளின் துரோகத்தனத்தை ஸ்ரீலங்கா அரசே பொறுப்பேற்கவேண்டும் என்றுள்ளது. (எ)

# மாவை கந்தன் காம்யோற்சவம் விசேட பூசைகளுடன் ஆரம்பம்

வலி.தெற்கு,ஜூலை12

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த காம்யோற்சவம் நேற்று பகல் விசேட பூசைகளுடன் ஆரம்பமாகியது.

காம்யோற்சவத்தையொட்டி குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர்.

தெல்லிப்பழையில் இருந்தும் சேந்தான் குளத்தினூடாகவும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்களில் பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தந்தனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரும் பஸ்சேவையை நடத்தினர். ஆலய உற்சவத்துக்கு வருகைதந்த பக்தர்களுக்கு அன்னதான மண்டபத்தில் அன்னதானம், தாகசாந்தி என்பன ஆலயத்தினரால் வழங்கப்பட்டன. உற்சவ காலத்தில் தினமும் அன்னதானம் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் ஆலயத் தெற்கு வீதியில் வியாபார நிலையம் அமைக்கப்பட்டு ஆலய தரிசனத்துக்கு வரும் அடியார்களுக்குத் தேவையான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து பாதுகாப்பு வசதிகளை மேற்கொண்டிருந்தனர்.

சென்.ஜோன்ஸ் முதலுதவிப் பிரிவினர், சாரணர்கள் தொண்டர் சேவைகளை ஆற்றி வருகின்றனர். (எ-152)

# யாழ். மறை மாவட்டத்தின் நற்கருணை மாநாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ். மாவட்ட நற்கருணை மாநாடு கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமாகியது. எதிர்வரும் 17ஆம் திகதிவரை இந்த மாநாடு நடைபெறும்.

நற்கருணை மாநாட்டையொட்டிய நற்கருணைக் கண்காட்சி நாளை 13ஆம் திகதி முதல் எதிர்வரும் 17ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறுகிறது.

கடந்த 10ஆம் திகதி சிறுவர்கள் மற்றும் இளையோருக்கான நற்கருணை ஒன்றுகூடல் நடைபெற்றது.

எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக் கிழமை தாய், தந்தை பெரியோர்களுக்கான நற்கருணை ஒன்றுகூடலும் 16ஆம் திகதி சனிக்கிழமை குருக்கள், துறவிகள் , அருட் சகோதரர்களுக்கான நற்கருணை ஒன்று கூடலும் நடைபெறும்.

நற்கருணை மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் யாழ். புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் மாலை 5 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஆரம்பமாகும். இதில் யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள், துறவிகள், இறை மக்கள் அனைவரும் ஒன்றுகூடுவார்கள்.

இறுதிநாள் நிகழ்வில் திருப்பலி, நற்கருணை எழுந்தேற்றம்,சிறப்புரைகள், நற்கருணை ஆராதனை, பவனி, ஆசீர்வாதம் என்பன நடைபெறும். (8-190-ரி)

# பருத்தித்துறை ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கு கொடிவாரம் மூலம் நிதி சேகரிக்கப்படும்

வடமராட்சி,ஜூலை12

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்காகவும் வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாகவும் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக் கிழமை முதல் 25ஆம் திகதி வரை கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் உப தலைவர் கே.தணிகாசலம், செயலாளர் வி.ஜி.தங்கவேல் ஆகியோர் நேற்று நண்பகல் வைத்தியசாலை கேட்போர்கூடத்தில் உள்ளூர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தி விளக்கிக் கூறினர்.

வைத்தியசாலையின் அன்றாடச் செலவுகளுக்குத் திணைக்களம் வழங்கும் தொகை போதாமையினால் அப்பற்றாக்குறையை அபிவிருத்திச் சபையே பொறுப்பேற்றுள்ளது. இச்செலவுகளைச் சீர்செய்யவும் வேறு அவசியத் தேவைகளுக்கு நிதி பயன்படுத்தவுமே இக்கொடிவாரம் அனுஷ்டிக்கப்படுகிறது என அவர்கள் விளக்கமளித்தனர். (எ-173-70)

# உதைபந்தாட்ட அணி: தெரிவுக்குப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை12

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கான யாழ். பாடசாலைகள் அணியைத் தெரிவுசெய்வதற்கென போட்டி ஒன்று நடத்தப்படவிருக்கின்றது.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்படவிருக்கும் இப்போட்டி 13,15,17,19 வயதுப் பிரிவினருக்காக நான்கு பிரிவுகளாக நடைபெறும்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களை நாளை புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு வரும்படி சங்கத்தின் இணைப்பாளர் கேட்டுள்ளார். (எ-3)

நாட்வெஸ்ட் சவால் கிண்ணம்:

# 9 விக்கெட்டுக்களால் இங்கிலாந்தை வீழ்த்தியது ஆஸி. பிரெட் லீ துல்லியப் பந்துவீச்சு; பொன்ரிங் அதிரடிச் சதம்

துல்லியப் பந்தவீச்சில் பிரெட் லீ கைகொடுக்க, துடுப்பாட்டத்தில் பொன்ரிங் அதிரடியாகச் சதமடிக்க நாட்வெஸ்ட் தொடரில் 7 விக்கெட்டுக்களால் இங்கிலாந்தை வீழ்த்தியது ஆஸ்திரேலியா. இதன்படி 3 ஆட்டங்களைக் கொண்ட இத்தொடர் 1-1 என்ற கணக்கில் சமனானது.

ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே 3 ஆட்டங்களைக் கொண்ட நாட்வெஸ்ட் சவால் கிண்ண ஒருநாள் தொடர் இங்கிலாந்தில் நடந்துவருகிறது. இதன் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து 9 விக்கெட்டுக்களால் வெற்றியடைந்தது. இரண்டாவது ஆட்டம் லோர்ட்ஸில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இந்த ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹெய்டன் நீக்கப்பட்டு, சைமன் கெட்டிச் சேர்க்கப்பட்டிருந்தார். இங்கிலாந்து அணியில் எந்த மாற்றமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் பொன்ரிங் இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தார். இதன்படி, களமிறங்கிய அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் திரஸ்கொதிக்(14), ஸ்ராவ்ஸ்(11) ஆகியோர் கஸ்பரோவிச்சின் பந்தில் விரைவில் ஆட்டமிழந்தனர்.

இவர்களுக்கடுத்து களமிறங்கிய அணித் தலைவர் வோகன்(1), பீற்றர்சன்(15) ஆகியோரும் சொற்ப நேரமே களத்தில் இருந்தனர். ஆட்டத்தின் ஒரு கட்டத்தில் 45 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து இங்கிலாந்து தடுமாறியது.

எனினும், நடுவரிசை வீரரான பிலிங்டொவ் மட்டும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை மீட்டார். இவர் 10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 87 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இவருக்கடுத்து துடுப்பெடுத்தாடிய பின்வரிசை வீரர்களால் பெரியளவில் ஓட்டங்களைக் குவிக்கமுடியவில்லை. இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்றது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பிரெட் லீ துல்லியமாகப் பந்துவீசி 41 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தவிர, கஸ்பரோவிச் 2 விக்கெட்டுக்களையும் மெக்ராத் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

224 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலளித்தாடிய ஆஸ்திரேலியா 44.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. எனவே, இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 7 விக்கெட்டுக்களால் மிக இலகுவாக வெற்றியடைந்தது.

அந்த அணி சார்பாக அணித் தலைவர் பொன்ரிங் மிகச் சிறப்பாக ஆடி 111 ஓட்டங்களைக் குவித்தார். இது ஒருநாள் கிரிக்கெட்டில் இவரது 18 ஆவது சதமாகும். இதன்படி, அதிகச் சதம் அடித்த ஆஸ்திரேலிய வீரரான மார்க்வோவின் (18 சதங்கள்) சாதனையைச் சமன் செய்தார் பொன்ரிங்.

பந்துவீச்சில் இங்கிலாந்து தரப்பில் பிலிங் டொவ், கைல்ஸ் கோவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

துல்லியப் பந்துவீச்சை வெளிப்படுத்திய ஆஸ்திரேலிய வீரர் பிரட் லீ ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். (க-3)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## புலிகளின் சமிக்ஞையை முஸ்லிம்கள் ஆக்கபூர்வமானதாக மாற்றவேண்டும்

*"பொதுக்கட்டமைப்பு விவகாரம் உட்பட பல விடயங்களில் நமது தமிழ் பேசும் சகோதரர்களாகிய முஸ்லிம் மக்களுக்கு ஏதேனும் ஆதங்கங்கள், பிரச்சினைகள் இருக்குமானால், அவை குறித்து முஸ்லிம் தலைவர்களோடு நேரில் பேசித் தீர்த்துக்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம். அவர்கள் எம்மோடு வந்து கலந்துரையாடி புரிந்துணர்வின் அடிப்படையில் இவற்றை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளமுடியும்"*

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

ஈழத்தமிழர்கள் போல முஸ்லிம்களும் இந்த நாட்டின் சிறுபான்மையினர்தான். ஒரு சிறுபான்மை இனத்தை அடக்கி இன்னொரு சிறுபான்மை இனம் நிமிர முடியாது என்பது தெட்டத் தெளிவான உண்மை. தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு சிறுபான்மையினரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலமே தமது நியாயமான உரிமைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை மறந்துவிடக்கூடாது.

அதேவேளை,கடந்த கால அனுபவப் பாடங்களையும் ஒரேயடியாக நாம் மறந் துவிட முடியாது. அந்தப் பட்டறிவையும் எதிர்கால வழிநடத்தலுக்கு திசை காட்டும் கருவியாகக் கொள்ள வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம்.

இழந்த உரிமைகளுக்காக- அடக்கு முறைக்கு எதிராக- மூன்று தசாப்தகாலம் அஹிம்சை வழியிலும் அதற்குப் பின்னர் இரண்டு தசாப்த காலம் ஆயுத வழியிலும் போராடி ஒரு வரலாற்றுத் திருப்புமுனையில் நின்று கொண்டுதான் தமிழினம் - அமைதி பற்றி - சமாதான முயற்சிகள் குறித்து- பேசுகின்றது. பதினேழாயிரம் போராளிகளையும், ஐம்பதாயிரத் துக்கும் அதிகமான பொதுமக்களையும், பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா பொறுமதியான சொத்துகள், உடைமைகள், அபிவிருத்தி வாய்ப்புகள் போன்றவற்றையும் இழந்து,பெரும் பின்னடைவுகளையும் சந்தித்து, பல்லாயிரம் மக்களின் அங்கப் பாதிப்புக்களை எதிர்கொண்டு, இந்த நிலைக்குத் தமிழ்ச் சமூகம் வந்திருக்கின்றது என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

இந்தக் கொடூர இனப் போரில் முஸ்லிம்கள் நேரடியாகச் சம்பந்தப்படாவிட்டாலும் இடையில் சிக்கி அவர்கள் அனுபவித்த- எதிர்கொண்ட- இழப்புகளும் கூட கொஞ்ச நஞ்சமன்று. அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களும் அளப்பரியவை. அவையும் மறுக்கவோ, மறைக்கவோ கூடியவையல்ல.

ஆனால், இவற்றுக்கு மத்தியில் முஸ்லிம் தலைவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள், இப்போது எப்படி நடக்கிறார்கள், இனி எப்படி நடக்கவேண்டும் என்பதே கேள்வியாகும்.

தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் இரண்டு தசாப்தகால விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக மிகக் கொடூரமான- பேரழிவைத்தந்த - முன்னர் எப்போதும் இல்லாத பயங்கர- இராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிட்ட இலங்கை அரசு, ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசுதான். 1995 இற்கும் 2000 இற்கும் இடையில் அரங்கேறிய இந்தக் கொடூரங்கள் பின்னர் ஓரளவு தணிந்தன.

இந்தக் கொடூர ஆட்சியும் அளவில்லா இராணுவ அடக்குமுறையும் எப்போது குறைந்தன என்பதை தமிழ் - முஸ்லிம் சமூகங்கள்ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஓரளவு கட்டுக்கோப்பில் இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொடுத்த முண்டில் ஆட்சியைத் தக்கவைத்திருந்த ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசே அந்த மிகக் கொடூரப் போக்கைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டது.

என்றைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமோடு முரண்பட்டு அவரையும், அவரது அணியினரையும் ஜனாதிபதி சந்திரிகா தமது அரசிலிருந்த வெளியேற்றினாரோ அன்றோடு அவரது அந்த அரசு அல்லாடத் தொடங்கியது; ஆட்டங்காணத் தொடங்கியது. தமிழர்களுக்கு எதிரான இராணுவ நெருக்குவாரமும் முன்னர்போல் அல்லாது தணியத் தொடங்கியது.

அன்று தமிழர்கள்மீது பெரும் இராணுவக் கெடுபிடிகளை சிங்கள, பௌத்த பேரினவாத அரசுகள் கட்டவிழ்த்துவிட்ட போது, அந்த நடவடிக்கைகளுக்கு முஸ்லிம்கள் துணை போனார்கள் என்று யாரும் குற்றஞ்சாட்டவரவில்லை. அப்படிக் கூறுவது தப்பாக இருக்கலாம். ஆனால், முஸ்லிம் தலைவர்கள் கொடுத்த முண்டினால் அரசைத் தக்கவைத்திருந்த சிங்கள அரசுகளே தமிழர்கள் மீது தமது கொடூர இராணுவப் பிடியை இடுக்கிவைத்திருந்தன என்பது மறைக்கப்படக்கூடியதல்ல. நாளை கூட இது மீண்டும் நடக்கலாம்; நடக்காது என்று சொல்வதற்கும் இடமில்லை.

இத்தகைய கசப்பான பல அனுபவங்களுக்குப் பின்னரும் முஸ்லிம் சகோதரர்களோடு பேசித் தீர்ப்பதில் தமிழர் தலைமை முனைப்பாகவும், விருப்பாகவும் இருப்பது வரவேற்கத்தக்க நல்ல அம்சம்.

நேரடியாகக் கொடூர யுத்தம் புரிந்துகொண்டு, பேரழிவுக்கும் போரழிவுக்கும் வழிசமைத்துக்கொண்டிருந்த இரண்டு தரப்புகள், அந்த யுத்தத்தை நிறுத்தி அமைதி வழியில் தீர்வு காண்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்தபோது அதில் மூன்றாம் தரப்பாக இடம் பிடித்து ஒரு வரியைக் கூட முஸ்லிம் தலைவர்களால் மாற்ற முடியவில்லை என்று முஸ்லிம்கள் தரப்பில் சிலரும் -

ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற பிரதேசங்களின் மீள்கட்டுமானம் தொடர்பாக அந்தப் பிரதேசங்களின் நிர்வாக, ஆளுகைக் கட்டுப்பாடுகளைத் தம்வசம் வைத்திருக்கும் இரண்டு படைத்தரப்புகள் அல்லது நிர்வாக ஆட்சியாளர்கள் அதற்காக ஒப்பந்தம் செய்யும்போது அதில் தமது பிரதிநிதியையும் ஒரு தரப்பாக ஒப்பமிடச் செய்யவில்லை என்று குறிப்பிட்டு முஸ்லிம் தலைவர்களில் ஒரு தரப்பினரை மற்றத் தரப்பினரும் -

குறை கூறி, பெருங்குழப்பம் செய்து, பிரச்சினைகளை எழுப்பி எல்லாவற்றையுமே போட்டுடைக்கச் செய்வது பொருத்தமற்றது. அதைவிடுத்து, புலிகள் தரப்பில் காட்டப்பட்டிருக்கும் சமிக்ஞையை பச்சை விளக்காக எடுத்து, அதைப் பற்றிப்பிடித்து, ஆக்கபூர்வமான இணக்கநிலை ஏற்படுவதற்கு முஸ்லிம் தலைவர்கள் முயற்சிக்கவேண்டும்.

### இயந்திரப் படகுகளின் தரத்தைப்பேண

# நீரியல்வளத் திணைக்களத்திற்கு பொறியியலாளரை நியமிக்குக!

### கடற்றொழில் சம்மேளனத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ். மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களின் இயந்திரப் படகுகளைப் பரிசோதித்துத் தரம்பேணுவதற்கு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் கட்டுமானத்துக்கான செயலணியின் பணிப்பாளர் மனோ தித்தவெலவுடனான சந்திப்பொன்றிலேயே கடற்றொழில் சம்மேளனத் தலைவர் சி.தவரெட்ணம் இக் கோரிக்கையை முன்வைத்தார். இது குறித்து அவர் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் இயந்திரப் படகுகளைப் பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், இயந்திரப் படகுகளைப் பரிசோதிக்கவும் அவற்றின் தரத்தைப் பேணுவதற்கும் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தில் ஒரு பொறியியலாளர் கூட நிரந்தரமாக இல்லை.

எனவே, தற்போதைய தேவையைக் கருத்திற்கொண்டு யாழ். மாவட்டத்திற்கென நிரந்தரமாக படகு பரிசோதிக்கும் பொறியியலாளரை நியமிக்கவேண்டும் - என்று அவர் தெரிவித்தார். (ஒ-202-204)

## மாகாணப் பாடசாலை ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.தெற்கு,ஜூலை12

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் 2006ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கஷ்டப்பிரதேசபாடசாலைகளில் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாகச் சேவையாற்றிய ஆசிரியர்களும், வசதியான பாடசாலைகளில் ஆறு ஆண்டுகள் தொடர்ச்சியாகச் சேவையாற்றிய ஆசிரியர்களும் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் தகுதியான ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதி வலயக் கல்விப் பணிப்பாளரூடாக அனுப்பிவைக்கவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-152)

## தேசிய மருந்துக் கொள்கை வரைபு அரசு அனுமதிக்காகச் சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜூலை12

அத்தியாவசிய மருந்து வகைகளைத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கு வழிசெய்யும் வகையில் உருவாக்கப்பட்ட தேசிய மருந்துப் பொருள்கள் கொள்கைத் திட்டவரைபு சுகாதார அரசின் அனுமதிக்கா சுகாதார அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வைத்திய நிபுணர்கள், உள்ளூர் மருந்து உற்பத்தியாளர்கள், மருந்துப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள், அரச மருந்துப் பொருள் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்டவர்களும் அடங்கிய குழுவொன்று இந்தக் கொள்கைத் திட்ட வரைபைத் தயாரித்துள்ளது.

இது அரசினால், நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் ஒவ்வொரு குடும்பமும் மருந்துத் தேவைக்காகச் செலவிடும் பணத்தில் கணிசமான அளவை மீதப்படுத்தமுடியுமெனவும் -

வெளிநாடுகளிலிருந்து மருந்து வகைகளை இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பெருமளவிலான அந்நியச் செலாவணியினை மீதப்படுத்த முடியுமெனவும் - தெரிவிக்கப்படுகிறது.

இத் திட்டத்திற்கமைய அரச மருந்துப் பொருள் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் செயற்பாடுகள் மாற்றியமைக்கப்படவுள்ளன. உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர்களுக்கு அத்தியாவசிய மருந்துகளைத் தயாரிப்பதற்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கவும் இத்திட்டம் வழிசெய்கிறது.

அத்துடன், தற்போது 9 ஆயிரமாக இருக்கும் அத்தியாவசிய மருந்துகளின் எண்ணிக்கை 350 ஆகக் குறைக்கப்படவிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது எதிர்வரும் மூன்றுமாத காலத்தினுள் நடைமுறைப்படுத்தப்படுமென் எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-206)

## தென்மராட்சிக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,ஜூலை12

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் 38 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத் திட்டங்களுக்கென 26 லட்சத்து 65ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஸ் அறிவித்துள்ளார்.

இந்த வேலைத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்க பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஒ-117-31)

## மருத்துவ சிகிச்சை நிலையம் உடுவில் பகுதியில் அவசியம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

உடுப்பிட்டிப் பகுதியில் மத்திய மருந்தகம் மற்றும் மகப்பேற்றுமனை நிலையமொன்று இல்லாததால், இங்குள்ள மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

- இவ்வாறு உடுப்பிட்டி வடக்குப் பிரதேச முன்னேற்ற சங்கத் தலைவர் தே.பிரசாத் யாழ். அரச அதிபருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் உடுப்பிட்டி - வல்லை பிரதான வீதியில் இருந்த உடுப்பிட்டி அரசினர் வைத்திய சாலை இராணுவ நடவடிக்கையினால் முற்றாக அழிவடைந்துவிட்டது. தற்போது உடுப்பிட்டிப் பகுதி மக்கள் நீண்டதூரம் சென்றேவைத்தியவசதியைப்பெறவேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

எனவே, உடுப்பிடி மக்களின் நன்மை கருதி மத்திய மருந்தகம் மற்றும் மகப்பேற்றுமனையொன்றை இங்கு அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் என்று அதில் உள்ளது.

இதேவேளை,

மத்திய மருந்தகமும் மகப்பேற்றுமனையும் அமைப்பதற்கான காணியை வழங்குவதற்கு உடுப்பிட்டி வடக்குப் பிரதேச முன்னேற்றச் சங்கம் முன்வந்துள்ளதாக அதன் தலைவர் தே.பிரசாத் தெரிவித்தார்.

மேற்படி கடிதத்தின் பிரதி வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஒ-185)

## பெண்மணியிடம் சங்கிலியை அபகரித்த திருடர்களில் ஒருவர் சிக்கினார்!

வலி.வடக்கு,ஜூலை12

வீட்டினுள் இருந்த வயோதிபப் பெண்மணியிடம் சங்கிலியைப் பறித்துக் கொண்டு ஓடிய திருடர்களில் ஒருவர் பொதுமக்களிடம் சிக்கினார்.

கலட்டியம்மன் கோவிலடியில் கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. இப்பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் பெயரொன்றைக்கூறி அழைத்தபடி மூன்று இளைஞர்கள் நுழைந்தனர். அங்கு தனியே இருந்த வயோதிபப் பெண்மணி அணிந்திருந்த சங்கிலியை அவர்கள் பறிக்க முற்பட்டனர். அப்போது அப்பெண்மணி எதிர்ப்புக்காட்டினார். அதனால், அவரின் தலையை சுவருடன் மோதி நிலைகுலையச் செய்து கொள்ளையர்கள் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிக்க முயற்சித்தனர். அப்போது வீட்டினுள் வந்த அயல் வீட்டுச் சிறுவன் ஒருவன் கொள்ளையரைக் கண்டு கூச்சலிடவே அயலவர்கள் அங்கு கூடினர்.

இதனைத் தொடர்ந்து திருடர்கள் ஓட்டம் பிடித்தனர் அவர்களை விரட்டிச் சென்ற பொதுமக்கள் குளங்கரை ஒழுங்கையில் வைத்து திருடர்களில் ஒருவரைப் பிடித்தனர். ஏனைய இருவரும் தப்பி ஓடிவிட்டனர்.

பிடிபட்டவர் கலாசாரம் பேணும் இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஒ-86)

### உதயவாக்கு

நல்ல நண்பனை விரும்பினால் நல்ல நண்பனாய் இரு.

- ஓர் அறிஞன்

### நாளை

ஆனி 29
புதன்கிழமை
13.07.2005
திதி: ஸப்தமி
பின்னிரவு 4.26 வரை
நட்சத்திரம்: உத்தரம்
காலை 6.50 வரை உதயத்தில்
ஆனி உத்தர தரிசனம்
சுபநேரம்: 4.29 - 5.59
ராகுகாலம்: 11.59- 1.29
(யாவும் பழைய நேரப்படி)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

K.K.S. வீதி, மல்லாகம் பிரதான வீதியில் 12 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0602213492. (சி/42018)

### கடை விற்பனைக்கு

வீதிச் சான்றிதழ் பெற்ற கடை. தொடர்பு: இல. 325, 'தியாகு கலைக்கூடம்' பரமேஸ் வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P.: 222 6469. (37535)

### கார் விற்பனைக்கு

3 ஸ்ரீ XX, 5 ஸ்ரீ XX (மைனர்) A 35 (ஒஸ்ரின்) தொடர் இலக்கமுடைய கார்கள் விற்பனைக்குண்டு. உரிமையாளர் வெளி நாடு செல்ல இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 40/7, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (37525)

### வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரியடியில் சோம சுந்தரம் அவனியூவில் 1 3/4 பரப்புக் காணி யில் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 0112 553516. (37560)

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 011 4613157 (மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்புகொள்ளவும்). (37614)

### வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சுண்டிக் குளிப் பகுதியில் விசாலமான சகல வசதி களும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். தொடர்பு: 222 5780. (சி-43986)

**NEW SCIENCE HALL**
யாழ்நகர்
**A/L DAY CLASS**
**PHYSICS**
திரு.குமரன் (37631) (24-16)
திங்கள் முதல் வியாழன் வரை பிற்பகல் 3 மணி
**ஆரம்பம்: 13-07-2005**

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாள்களில் 2 Kgஇற்கு மேல் வளர்ச்சி யடைக்கூடிய பகிரா புறொயிலர் குஞ்சுகள் 13-07-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். ராஜீவ் - நவாலி றோட், ஆனைக்கோட்டை. தாரகை - முதலாம் கட்டை, பருத்தித்துறை. ராதா - மாவடி, வட்டுக்கோட்டை. ரஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட். கௌரி ஸ்ரோஸ் - பிரதான வீதி, பண்டத்தரிப்பு. மாருதி பாம் - வழக்கம் பரை, தொல்புரம். P.ரவி - சாவகச்சேரி. மதுரா - 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 2867, 222 3529 (37600)

### திருமண சேவை

1977ஆம் ஆண்டு, 2இல் செவ்வாய் பாவம் குறைந்த, லண்டனில் இருந்து வந்துள்ள மணமகனிற்கு அழகிய மணமகள் தேவை. படத்தோடு நேரில் உடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்(பதிவுக்கட்டணம் இல்லை). (37621)

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பம் (விவகாகரத்துப் பெற்ற பிள்ளைகள் அற்றவர்) 1959,சதயம், கும்பராசி, 8இல் செவ் வாய் 5'6" உயரம், 44 ¾ கிரகபாவம், நிறுவனத்தின் உரிமை யாளரான மணமகனுக்கு மணமகள் தேவை. 1959, உத்தராடம், மகர ராசி, 4½ கிரக பாவம், சைவ போசனம், கொழும்பில் Travel Agent உரிமையாளர், நன்கு வசதியான மணமகனுக்கு படித்த, சைவபோசன மணமகள் தேவை. சீதனம் தேவை யில்லை. "சிவாலயா" சர்வதேச திருமண நிலையம் (SIMB), 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**T.P.: 021 222 7844** (37616)

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பிடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0773151647

**அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.**
**31-07-2005க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.** **80% OFF**

**வகுப்புக்கள் ஆரம்பம்:-**
Batch II - 15/07/2005 -02.30-04.30
Batch I(a) - 16/07/2005 -11.30-12.30
Batch III - 17/07/2005 -02.00-03.00
Batch IV - 31/07/2005 -11.30-12.30

### மறை ஆசிரியர் தேர்வுக்கு விண்ணப்பம்

தேசிய மறையாசிரி யர் தேர்வுக்குக்கான விண்ணப்பங்கள் கத் தோலிக்க மறையாசி ரியர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

தகைமைத் தேர்வு Iஇற்கு ஜி.சீ.ஈ. சாதா ரண தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண் டும். தகைமைத் தேர்வு II இற்கு தேர்வு I இலும் தகைமைத் தேர்வு IIIஇற்கு தேர்வு IIஇலும் சித்தி பெற் றிருக்கவேண்டும்.

விண்ணப்பங்களை பங்குத் தந்தையரிடமோ அல்லது மறைக்கல்வி நிலையத்திலோ பெற்று எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ-30-302)

### முத்தமிழ்விழா

மானிப்பாய் மெமோ றியல் ஆங்கிலப் பாடசாலை முத்த மிழ் மன்றத்தின் முத் தமிழ் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அழகரட்ணம் மண் டபத்தில் நடைபெற வுள்ளது.

மன்றத்தலைவர் வ.சசிகரன் தலைமை யில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் வே.தி.செல் வரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிஇளம் பரிதி சிறப்புவிருந் தினராகக் கலந்து கொள்வார். (ஓ-204)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




கோப்பாய் வீதி, உரும்பிராய் கிழக் கைச் சேர்ந்த பாலச்சந்திரன் தயானி தம்பதியினரின் செல்வப் புதல்வி பானுஜா தனது முதலாவது பிறந்த நாளை 17.07.2005 அன்று சுவிஸ்ஸர்லாந்தில் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடு கின்றார். இவரை அம்மம்மா, அப்பம்மா, மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, மச்சான், மச்சாள், பெரியப்பா, பெரியம்மா மற்றும் உற்றார், உறவினர்கள் பூத வராஜர் துணையுடன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்க வென வாழ்த்துகின்றனர்.

தகவல் :
திருமதி.நா.தெய்வேந்திரம்
(அம்மம்மா)
(37597)(51-34-19)

உ

**புங்குடுதீவு கிழக்கு தல்லையப்பற்று அருள்மிகு முருகப்பெருமான் ஆலய**
***மகாகும்பாபிசேகம்***

காலம்: நாளை (13-07-2005) புதன்கிழமை காலை 6.30 மணிமுதல் 8.30 மணிவரையுள்ள ஆனி உத்தர நட்சத்திர சுபவேளையில் முருகப் பெருமானுக்கு மகாகும்பாபிசேகம் நடைபெறவுள்ளது.

குடமுழுக்கு பிரதம சிவாசாரியார்:
**சிவாகம கிரியா ஜோதி சிவஸ்ரீ சி.குகராஜக் குருக்கள்**
(ஷ ஆலயப் பிரதம குரு) ஆனைக்கோட்டை
முருகன் அருள் மலர் வெளியீடும் ஆசிரியுரைகளும்
ஆசிரியுரை:
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்
முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ ந.சர்வேஸ்வரக்குருக்கள் - சுன்னாகம்
மலர் வெளியீடு:
பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்
மதிப்பீட்டுரை:
பேராசிரியை திருமதி நாச்சியார் செல்வநாயகம்

☛ குடமுழுக்கு நாளிலும் அதனைத் தொடர்ந்து வரும் மண்ட லாபிசேக தினங்களிலும் தாக சாந்தியும் அன்னதானமும் வழங்கப் படும்.

*அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாய் வருகைதந்து கலந்துகொண்டு முருகன் அருள் பெற்றுய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.*

புங்குடுதீவு - 12.
(37625) (24-16)

ஷ ஆலயப் பரிபாலன
தர்மகர்த்தா சபையினர்.

# நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

# செல்வி கார்த்திகாயினி இராசேந்திரம் (கார்த்தி)

## (யா/கொக்குவில் இராமகிருஷ்ணவித்தியாலய தரம் 10 – மாணவி)



அன்னை மடியில்
29 – 10 – 1990

இறைவன் பாதத்தில்
07 – 06 – 2005

அன்பின் உறைவிடமே!
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
எங்கள் உயிர்த் தெய்வம் கார்த்தியே!
ஒரு திங்கள் ஆனபோதும் ஆறவில்லையே எம் இதயம்!
காலங்கள் கடந்தாலும் உம் பிரிவுதந்த
வேதனை எம்மைவிட்டு நீங்காது கார்த்தியே!

எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் இன்று (12.07.2005) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். அதில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உற வினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்புச் செல்வம் கார்த்தியின் துயர் செய்திகேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அயலவர்கள் செய்த உதவிகளுக்கும், அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், திருநெல்வேலி வர்த்தகர்களுக்கும், யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர் களுக்கும், சகல வழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் செய்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பு - இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(சி-42008)(24-16-38)

**'திருநெல்வேலி ஸ்ரோர்ஸ்'**
**பலாலி வீதி, திருநெல்வேலி.**

**திரு. திருமதி இராசேந்திரம்**
**(பெற்றோர்).**

# பெருந்திருவிழா

வட்டக்கச்சி,ஜூலை12

கிளிநொச்சி, இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-405-203)

# கண்டாவளைப் பிரிவில் 90 வீடுகள் புனரமைப்பு

வடக்கு-கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் 'றேப்' அனுசரனையுடன் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில 90 வீடுகளைப் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு வீடு புனரமைப்புக்கென இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

பரந்தன் கிராமத்தில் 18 வீடுகளும் காஞ்சிபுரம் கிராமத்தில் 16 வீடுகளும் உமையாள்புரம் கிராமத்தில் 21 வீடுகளும் கோரக்கண்கட்டு கிராமத்தில் 22 வீடுகளும் குமரபுரம் கிராமத்தில் 20 வீடுகளும் புனரமைக்கப்படவுள்ளன. கடந்தகாலப் போர் நடவடிக்கைகளின் போது கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல வீடுகள் அழிக்கப்பட்டன. தற்போது 5 கிராமங்களில் முதற்கட்டமாக வீடுகள் புனரமைக்கப்படவிருக்கின்றன.

(த-352-204)

# கால்நடை மருத்துவ போதனாசிரியர் பற்றாக்குறை

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடை மருத்துவ போதனாசிரியர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்படாது உள்ளன. இப்பிரதேசத்திற்கு 9 போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்படவேண்டிய நிலையில் உள்ளது. ஆனால், செம்மலை தொடக்கம் விசுவமடு வரை ஒரு போதனாசிரியர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார். இதனால், இப்பிரதேச கால்நடை தொடர்பான அபிவிருத்தி விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. எனவே ஏனைய போதானாசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்மெனக் கேட்கப்பட்டுள்ளது

(ஒ-341)

# வவுனியா வடக்கில் முன்பள்ளியை மீண்டும் இயக்கக் கோரிக்கை

புளியங்குளம்,ஜூலை12

வவுனியா வடக்கு நயினாமடு சின்னப் பூவரசங்குளத்தில் மீண்டும் முன்பள்ளி இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இங்கு இயங்கி வந்த முன்பள்ளியின் ஆசிரியை தனக்குரிய கொடுப்பனவு போதியளவு வழங்கப்படவில்லை என்றுகூறி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விலகிக்கொண்டார். அதற்குப் பிறகு கற்பிக்க முன்வரவில்லை. இதனால், கடந்த சில மாதங்களாக முன்பள்ளி இயங்கவில்லை.

இக்கிராமத்தில் வசிக்கும் முன்பள்ளிச் சிறார்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மீண்டும் முன்பள்ளியை இயக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-355)

# செம்மலை ம.வியில் புதிய கட்டம் பூர்த்தி செய்யப்படவில்லை

முல்லைத்தீவு,ஜூலை12

முல்லைத்தீவு, செம்மலை மகாவித்தியாலயத்திற்கென பாடசாலை வளவில் கடந்த 2003ஆம் ஆண்டு 'நிக்கொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட நூல் நிலையக்கட்டடமும் வகுப்பறைக் கட்டடத் தொகுதியும் இதுவரை பூர்த்திசெய்து தரப்படவில்லையென மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

நிதி ஒதுக்கப்பட்டு இரண்டு வருடங்களாகியும் கட்டட வேலைகள் முடியாமல் இருப்பதாகவும் எனவே, விரைவாக கட்டட வேலையைப் பூர்த்திசெய்து தருமாறும் சம்பந்தப்பட்டோர்களுக்கு அபிவிருத்திச் சங்கத்தினரால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(த-416)

# ரகுபதி குடியிருப்பில் முன்பள்ளி அமைக்குமாறு கோரிக்கை

வவுனியா வடக்கு புதூர் சந்தி புளியங்குளத்தில் உள்ள ரகுபதி குடியிருப்புத் திட்டத்திற்கு ஒரு முன்பள்ளி அமைத்துத் தருமாறு அக்குடியிருப்பு மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

சுமார் 15 வரையான முன்பள்ளிச் சிறுவர்கள் அக்குடியிருப்பிலுள்ளனர். முன்பள்ளி இல்லாமையால் அச்சிறுவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-355)

# வளப்பற்றாக்குறைகளுடன் கிளிநொச்சி பிரதம தபாலகம்

கிளிநொச்சி பிரதம தபாலகம் பல்வேறு வளப்பற்றாக்குறைகளுடன் இயங்குவதாக பிரதம தபாலதிபர் எஸ்.பேரம்பலம் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகளினால் முழுமையான சேதத்துக்குள்ளான இந்த தபாலகம் இன்றுவரை புனரமைக்கப்படவில்லை. விமானத் தாக்குதலினால் ஆட்டம் கண்டுள்ள கட்டடச் சிதைவுகளுக்கிடையே மேற்கூரை எதுவுமின்றி கீழ்தளப் பகுதியிலேயே தபாலகம் இயங்கிவருகிறது.

இந்தத் தபாலகத்தின் புனரமைப்புக் குறித்து திட்டங்கள் வகுக்கப்பட்டபோதும் தபால் திணைக்களம இதுவரை இதனைப் புனரமைக்க நிதி எதையும் ஒதுக்கவில்லை என்று தபாலதிபர் தெரிவித்தார்.

10 அலுவலக ஊழியர்கள் தேவை யாக உள்ளபோதிலும் 3 பேர் மாத்திரமே கடமையில் உள்ளனர் எனவும் 40 வெளிநிலை ஊழியர்கள் தேவையாக உள்ளபோதும் 18 ஊழியர்களே பணிபுரிகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், தற்காலிக நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் எவையும் அங்கு பயன்பாட்டில் இல்லையெனவும் மின்வசதியைப் பெறுவதற்குக் கூட தற்போதைய கட்டடம் உகந்த நிலையில் இல்லாதிருக்கின்றது எனவும் தபாலதிபர் கவலை தெரிவித்தார்.

எது எப்படி இருந்தபோதும் குறைந்த ஊழிய வளத்துடன் மாவட்டத்தின் சகல பகுதியிலும் ஓரளவுக்குச் சீராகத் தபால் விநியோகம் நடை பெறுவதாகவும் இதற்காக ஊழியர்கள் கூடிய நேரம் கடமையாற்றி வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-301)

# துணுக்காய் வலயப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் விவரம்

துணுக்காய் வலயப் பாடசாலை மாணவர்களிடையே கணித, விஞ்ஞான வினாடிவினாப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாமிடம் பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கணித வினாடிவினாப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

தரம் 6 - யே.அருட்சிகன் (பாலிநகர் மகாவித்தியாலயம்), தரம்7 - த.நிசப்தன் (பாலிநகர் மகாவித்தியாலயம்), தரம்8 - த.துவாரகா (பாலிநகர் மகாவித்தியாலயம்), தரம்9- க.தர்ஷிகா (பாலிநகர் மகாவித்தியாலயம்), தரம்10- க.கனிஸ்ரன் (ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்), தரம்11- ச.துவாரகா (யோகபுரம் மகாவித்தியாலயம்).

விஞ்ஞான வினாடிவினாப் போட்டி: தரம்7- வை.கிருஷ்ணதாஸ (அனிஞ்சியன்குளம் அ.த.க.பாடசாலை), தரம்8- க.தீசனா (கற்சிலைமடு அ.த.க.பாடசாலை), தரம்9- இ.ரதீசன் (அனிஞ்சியன்குளம் அ.த.க. பாடசாலை), தரம்10- கி.கரோசாந் (பாலிநகர் மகாவித்தியாலயம்), தரம்11 - ப.ஆதவன் (கற்சிலைமடு அ.த.க.பாடசாலை). (த-353-204)

# அனிஞ்சியன்குளம் வித்தியாலயத்தில் சாரணர் பயிற்சிப் பாசறை

அனிஞ்சியன்குளம் தமிழ்க்கலவன் வித்தியாலய சாரணிய அமைப்பினால் பாடசாலை சாரணிய மாணவர்களுக்கு மூன்றுநாள் பயிற்சிப் பாசறை நிகழ்வு கடந்த முதலாம் திகதி தொடக்கம் மூன்றாம் திகதிவரை ஒட்டறுத்தகுளம் தென்னிந்திய திருச்சபை வளாகத்தினுள் இடம்பெற்றது.

பாடசாலை சார ணியப் பொறுப்பாசிரியர் சு.சுபநேசன் தலைமை யில் நிகழ்வு ஆரம்பமானது. இந்நிகழ்வில் மங்கள விளக்குகளை மல்லாவி நீதிமன்ற நீதியாளர் செல்வி வே.அல்லிராணி, தமிழீழ வைப்பக மாங்குளக் கிளைமுகாமையாளர் யுனராஜ், ஐயன்குளம் திலீபன் மருத்துவ மனையைச் சேர்ந்த செல்வி சுகிர்தா, பாலி நகர் சாரணியப் பொறுப்பாசிரியர் சே. ஜெய காந்தன ஆகியோர் ஏற்றிவைக்க தேசியக் கொடியினை திலீபன் மருத்துவமனைப் பொறுப்பு வைத்திய அதி காரி செல்வி கதிர்ச்செல்வி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பாடசாலைக் கொடியினைப் பாடசாலை முதல்வர் கே.ஜெகதீஸ்வரன் ஏற்றிவைத்தார். சாரணியக் கொடியினை பாடசாலை குருளைச் சாரணியப் பொறுப்பாசிரியர் திருமதி ந.சர்வேஸ்வரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பாடசாலை சாரணிய அமைப்பினால் பாடசாலை சாரணிய மாணவர்கள் 51பேருக்கு தமிழீழ வைப்பகத்தில் சேமிப்புக் கணக்குத் திறக்கப்பட்டு, சேமிப்புப் புத்தகம் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின. தற்கால சட்டம், ஒழுங்கு விதி பற்றி மலலாவி நீதியாளர் செல்வி வே.அல்லிராணியும் முதலுதவி (அவசரசிகிச்சை) குறித்து திலீபன் மருத்துவமனைப் பொறுப்பு வைத்திய அதிகாரி செல்வி கதிர்ச்செல்வியும் தொலைத்தொடர்பு பற்றி இளவேனில் பணியாளர் க. வைகுந்தவாசனும் கணனி அறிமுகம் பற்றி இளவேனில் பணியாளர் ந.நவசீலனும் சுகாதாரம் தொடர்பாக தமிழீழ சுகாதார சேவை இணைப்பாளர் ஜீ.அரவிந்தனும் கருத்துரைகளை வழங்கினர்.

தொடர்பாடல் குறித்து, துணுக்காய் கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரு.விஜயபாலாவும் தலைமைத்துவம் குறித்து துணுக்காய் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.வேலும்மயிலும் விளையாட்டுக்கள் தொடர்பாகப் பாலிநகர் ம.வி.சாரணியப் பொறுப்பாசிரியர் செ.ஜெயகாந்தனும், வீதிப்பாதுகாப்புப் பற்றி பிரதேசப் பொறுப்பாளர் சி.புனிதனும் கருத்துரை வழங்கினர்.

இறுதிநாள் அன்று மாலை 7 மணிக்கு சாரணிய தீப்பாசறை நிகழ்வு இடம்பெற்றது. பாசறைத் தீயினை துணுக்காய் கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிபபாளர் ரு.விஜயபாலா ஏற்றிவைத்தார். தீச்சுடர் பாடல் சத்தியப்பிரமாணத்தினைத் தொடர்ந்து ஆசியுரையினை துணுக்காய் சாரணிய சங்க உறுப்பினரும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி வ.சந்திரபாலன் வழங்கினார். தொடர்ந்து கருத்துரைகளைப் பாடசாலை முதல்வர் கே.ஜெகதீஸ்வரன், ஆசிரிய ஆலோசகர் திருமதி சா.இராஜேஸ்வரா, சாரணியப் பொறுப்பாசிரியர் செ.ஜெயகாந்தன் பிரதேசப் பொறுப்பாளர் சி.புனிதன் ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வில் துணுக்காய் கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அயல் பாடசாலை சாரணியப் பொறுப்பாசிரியர்கள், சாரணிய மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(த-322)



நிகழ்வில் கலந்துகொண்ட சாரணிய மாணவர்களையும் விருந்தினர்களையும் படத்தில் காணலாம். *(படங்கள்: மல்லாவிச் செய்தியாளர்)*

# வீதி திருத்தப் பணிகளில் தாமதம்

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதி திருத்தும் பணிகள் தாமதமாகவே நடைபெற்றுவருகின்றன என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது. நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த இவ்வீதியின் ஒருபகுதி மட்டுமே தற்போது திருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த இரு மாதங்களாக வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

கிளிநொச்சியில இருந்து வட்டக்கச்சி இராமநாதபுரம் ஊடான பேருந்துப் போக்குவரத்துப்பாதை இதுவாகும். இவ்வீதி 17 கிலோமீற்றர் நீளமானது. இதில் 7 கிலோமீற்றர் பகுதியே தற்போது கிரவல் இடப்பட்டு தார்பூசப்பட்டு வருகின்றது. இப்பணிகூட ஆமைவேகத்திலேயே நடைபெறுகின்றது. இதனால், பொதுமக்கள் போக்குவரத்தில் பலத்த நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அக்கறையுடன் செயற்பட்டு மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தவேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன், மிகுதி 10 கிலோமீற்றர் வீதியினையும் விரைவில் திருத்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(த-405)

# நீர் முகாமைத்துவம் குறித்து மதியுரையகத்தில் கருத்தரங்கு

கிளிநொச்சி,ஜூலை12

கிளிநொச்சி பொருண்மிய மதியுரையகத்தினால் கடந்த 8ஆம் திகதி மதியுரையகக் கேட்போர் கூடத்தில் நீர் முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அருணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த தர்மா நீர்முகாமைத்துவம் தொடர்பான கருத்துகளை வழங்கினார்.

நீரினை எவ்வாறு சுத்திகரிக்கலாம் என்பது தொடர்பாகவும் விவசாயத்திற்கான நீரினை எவ்வாறு சிக்கனமாகப் பயன்படுத்தலாம் என்பது தொடர்பாகவும் நீரினால் ஏற்படும் நோய்கள் பற்றியும் பல விடயங்கள் கலந்துலையாடப் பட்டன நிகழ்வில் பாடசாலை மாணவர், ஆசி ரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வினாடிவினாப் போட்டி

புதுக்குடியிருப்பு,ஜூலை12

முல்லைத்தீவு வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கணித, விஞ்ஞான வினாடிவினாப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியிலும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

அந்தந்தக் கோட்டப் பாடசாலை மாணவர்கள் உரிய பாடசாலைகளில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றலாம் என உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (எ-353-204)

# பாடசாலை மாணவருக்கு மருத்துவக் கருத்தரங்கு

ஒட்டுசுட்டான்,ஜூலை12

கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவப் பிரிவினர் 'வருமுன் காப்போம்' என்ற தலைப்பின் கீழ் கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கு கருத்துரை நடத்தினர்.

திலீபன் மருத்துவமனை மருத்துவப் போராளி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 'நோய்களிலிருந்து தப்பிக்கொள்வது எவ்வாறு, என்னும் பொருளில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

(த-341-204)

# கரும்புலிகள் பாகம்-9 இசை நாடா வெளியீடு

அளம்பில்,ஜூலை12

முல்லைத்தீவு முத்தவெளியில் கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற கரும்புலிகள் நினைவுநாள் விழாவில் கடற்கரும்புலிகள் இசை நாடா பாகம் - 9 வெளியிட்டு வைக்கப்பட்டது.

கடற்புலிகளின் மகளிர் படையணித் தளபதிகளில் ஒருவரான பாவை இசை நாடாவை வெளியிட்டு வைக்க முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா பெற்றுக்கொண்டார்.

முல்லை. மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் ரங்கன் தலைமையில் அங்கு இடம்பெற்ற கரும்புலிகள் நினைவு விழாவில் முல்லை. வலயப் பாடசாலை மாணவர்களினதும் ஏனையோரதும் கலை நிகழ்வுகள் சிறப்பான முறையில் இடம்பெற்றன.

(த-416)

# மீளக்குடியமர்ந்தோரின் தேவைகள் குறித்து கலந்துரையாடல்

ஒட்டுசுட்டான்,ஜூலை12

மன்னார் முசலி பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள மடல்குளம் பகுதியில் 'மீளக்குடியமர்ந்த மக்களின் தேவை' என்னும் பொருளில் கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மேற்படி பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய வேலைத்திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பிட்டது.

(எ-341-202)

# சமயபாடப் போட்டிப் பரீட்சை

வட்டக்கச்சி,ஜூலை12

கிளிநொச்சி இராமநாதபுரம் விலயலூர் முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு வட்டக்கச்சி இராமநாதபுரம் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கிடையே சமயபாடப் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

மாணிக்கப்பா வை.கதிரவேலு ஞாபகார்த்தமாக கிளிநொச்சி திருநெறிக்கழக அனுசரணையுடன் தரம்-3 தொடக்கம் தரம் - 13 வரையான மாணவர்களிடையே நடத்தப்படும் இப்போட்டிப் பரீட்சையில் வெற்றிபெறும் மாணவர்களுக்குத் திருவிழா இறுதியில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.(த-405)

# Restoring the Livelihoods of Tsunami Victims

Restoration of livelihoods to families is a key protection factor for all children affected by the Tsunami. In the aftermath of Tsunami, Save the Children in Sri Lanka engaged into a series of projects through partner organisations aiming to restore community and household economies by replacing lot productive assets and providing financial support. These projects are being implemented in Ampara, Batticaloa, Jaffna, Kilinochchi, Matara and Trincomalee Districts.

We are looking for committed, energetic, dynamic individuals to join our team.

Vacancies exist for the following positions:

## Partnership Development Manager

The Partnership Development Manager is responsible for the development implementations, and monitoring of programmes to achieve SCiSL's mission through partner organisations. The Partnership Development Manager is also responsible for playing a proactive role in advocacy at different levels. The work involved includes programme planning and management, budgetary responsibilities, management reporting and line management responsibilities.

**Base Stations : Batticaloa, Jaffna and Kilinochchi**

Qualifications and Experience:

*Essential*

- Post Graduate degree in Social Sciences.
- About 5 years of experience in the area of development of livelihoods.
- Analytical skills and experience in project planning and field experience with programme management.
- Experience in advocacy initiative.
- Skills related to computer literacy, financial management and report writing.
- Command of written and spoken English with fluency in one or more of the local languages.
- Ability and willingness to travel to all parts of the country.
- Strong interpersonal skills with special emphasis on managing teams.
- Skills related to training and capacity building of local partners.

*Desirable*

- Good understanding of government structures.
- Contacts within the NGO community, donor agencies and government departments.
- Previous experience with development interventions in the area of Child Rights.
- Knowledge of third national language.

## Partnership Management Officer

The Partnership Management Officer is responsible for the day to day coordination of Programme Partnerships supervised by the Partnership Development Manager. The Partnership Management Officer has responsibility for programme implementation at district level and is expected to take initiatives to improve the quality of the cooperation with partners.

**Base Stations: Ampara, Kilinochchi and Trincomalee**

Qualifications and experience:

*Essential*

- Graduate degree in Social Sciences or equivalent with preferably 3 years experience in development organisations.
- Good analytical skills and field experience in programme management.
- Understanding of development issues related to children.
- Ability to innovate along with a positive attitude to learn from communities.
- Skills related to participatory methods, computer literacy and financial management.
- Good knowledge of written and spoken English with fluency in one or more of the local languages. Skills in report writing.
- Ability and willingness to travel to all parts of the country. Good personal and liaison skills.

*Desirable*

- Exposure to development interventions in the area of Child Rights.
- Experience in working with partners.
- Knowledge of third national language.

*A highly competitive remuneration package awaits the selected candidates.*

The above positions would be initially for a period of one year.

*Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.*

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Please ensure that the names of two non-related referees are provided.

Applications together with an approx. 300 word hand written essay on how your previous work experience will assist in fulfilling the requirements of the above post, should be submitted to:

**Save the Children in Sri Lanka**

**Human Resources Unit,**

**58A, Horton Place, Colombo 7**

**Closing Date-21st July 2005**

Only applicants selected for the interview will be contacted.

No telephone inquiries please.

(C/43988)(42)

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on Education, Children Affected by Armed Conflict/Disaster and Social Harmony and Peace. Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.


## ஆய்வுரை நூல் வெளியீடு

சுழிபுரம்,ஜூலை12

சுழிபுரம் வழக்கம் பரை பஜனைச் சபையினர் அபிராமி அந்தாதி ஆய்வுரை நூலை வெளியிட்டுள்ளனர்.

இலவச வெளியீடாக வெளிவந்துள்ள இந்த நூலைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், பஜனைச் சபையினருடன் தொடர்பு கொள்ள முடியும் எனக் கூறப்பட்டது. (எ-28)

## சில்லாலை தெற்கில் ஒன்பது வீடுகள்

சில்லாலை தெற்கு (ஜே/149) கிராம அலுவலர் பிரிவில் உலக வங்கியின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஒன்பது வீடுகளைப் புதிதாக அமைக்கும் பணி அண்மையில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதேவேளை, சேதமடைந்த இரண்டு வீடுகளைப் புனரமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்ட பயனாளிகளுக்கு முதலாவது கட்டக் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளதாகச் சில்லாலை தெற்கு கிராம அலுவலர் தெரிவித்தார். (எ-135)

## பிரதேச சபைக்கு உழவு இயந்திரம்

நிக்கொட் திட்டத்தின் கீழ் வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்கு உழவு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபைப் பிரிவில் குப்பை கூழங்களையும் மற்றும் கழிவுப் பொருள்களையும் அகற்றுவதற்கு இந்த உழவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருவதாக பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்தார். (எ-135)

## நீரிறைக்கும் இயந்திரம்

தென்மராட்சி,ஜூலை12

சாவகச்சேரி நகர சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிதண்ணீர் விநியோகப் பாவனைக்கென யாழ். அரச அதிபரினால் நீரிறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. (எ-[illegible])

## மாடிக்கட்டட வேலைகள் பூர்த்தி

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நிறுவப்பட்ட பொது மண்டப மாடிக் கட்டடத்தின் நிர்மாண வேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளன.

சுவிஸ் நாட்டிலுள்ள மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் அண்மையில் வழங்கிய ஐந்து லட்சம் ரூபா நிதி மூலம் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகக் கல்லூரி அதிபர் வண. பிதா. ஜேம்ஸ் சிங்கராயர் இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)


## Save the Children in Sri Lanka

New beginning for children victims of conflict and violence Social protection of children

Save the children in Sri-Lanka will start a three year long project in Jaffna funded by USAID.

The project has three objectives

1- To enable children affected by the conflict to be reintegrated into their families/communities

2- To protect children from violence and abuse in home and community contexts

3- To develop alternatives to institutional care for children at risk

***Positions Vacant - Jaffna***

2 Field Officers (FO)

A field officer assists partners in project implementation and monitor progress against targets/objectives. 60-70% of FO's time is spent in field activities. Furthermore FO refers to operational plans in order to implement activities.

*Essential*

- Graduate in Social Sciences or any other related field
- Willingness and skills to work in communities and children's clubs
- Good analytical skills and excellent knowledge of monitoring tools
- Understanding of development issues related to children
- Good knowledge of government structures in charge of child protection
- Able to understand written English

*Desirable*

- Command of written and spoken English
- Experience working in communities

SCiSL will give special attention to motivated young graduates committed to improve children's lives

***Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.***

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before 18th July 2005 to:

**Save the Children in Sri Lanka,**

146, Temple Road, Nallur Jaffna.

* No telephone enquiries please.

* Only short listed candidates will be contacted.

(C/43989)(42)

## Save the Children

in Sri Lanka

We are looking for a committed & energetic individual to join our team as:

***Partnership Management officer- Education***

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

The aim of the post is to work closely with Partnership Development Manager to contribute to the day to day running of SCiSL programmes.

**Base Station: Jaffna**

Qualifications and experience:

*Essential*

- Degree holder in relevant field
- About three years work experience in a related field
- Good analytical skills and field experience in programme management
- Understanding of development issues related to children
- Skills in report writing
- Ability and willingness to travel to all parts of the country.
- Good personal and liaison skills
- Computer skills in Excel and Word
- Good in English and fluency in either Sinhala or Tamil
- Good organizational skills

*Desirable*

- Exposure to development interventions in the area of Child Rights.
- Experience in working with partners.
- Knowledge of third national language.

A competitive remuneration package awaits the selected candidate. The age limit at SCiSL is 60 years.

***Duration :***

The above position would be initially for a period of one year.

The post will involve travel to other parts of the country.

Please note that all positions in SCiSL are subject to transfer.

***Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.***

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before 18th July 2005 to:

**Save the Children in Sri Lanka,**

**146, Temple Road, Nallur Jaffna.**

- No telephone enquiries please.
- Only short listed candidates will be contacted.

(C/43987)(42)

Multilac® www.multilac.com

MACKSONS PAINTS WORLDWIDE

# கந்த வேலன் ரேடர்ஸ்

Color France

Colourbank

# வர்ண வங்கி திறப்புவிழா

காலம்: 12. 07. 2005

நேரம்: 11. 30 -12.30

வர்ண உலகில் புரட்சி




உயர் தரம்
குறைந்த விலை

ISO 9001:2000 SGS
UKAS QUALITY MANAGEMENT 005
SLS
WINNER OF NATIONAL AND NCE GOLD AWARDS FOR EXPORT EXCELLENCE
MICRON
Auto
Color France Colourbank
MITSUKO Auto Colourbank

COLORIS FRANCE Colourbank

(C/42006) (54)

கணேசன் ஹாட்வெயர்
பிரதான வீதி, நெல்லியடி.
T.P.:- 021 - 226 3290

12. 07. 2005
வர்ண வங்கித் திறப்பு விழா
கந்தவேலன் ரேடர்ஸ்
இல: 110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:- 021 - 222 2822

13. 07. 2005
வர்ண வங்கித் திறப்பு விழா
பாண்டியன் வாணிபம்
யாழ். சாலை கிளிநொச்சி.
T.P.:- 021 - 228 5844,5

## கணபதி ஜோதிட நிலையம்

### பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (37410)(21.11.17)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி வைத்திலிங்கம்

உடுப்பிட்டி, கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வைத்திலிங்கம் 10.07.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னு தம்பதியரின் அன்பு மகளும் , காலஞ்சென்ற குமாரசாமி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், மகேஸ்வரன் (லண்டன்), அருளேஸ்வரி (கொழும்பு), புவனேஸ்வரன் (ஜேர்மனி), தவனேஸ்வரன் (டென்மார்க்), சோதீஸ்வரி (ஆஸ்திரேலியா), பரமேஸ்வரி (கொழுமபு) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயசிறி (லண்டன்), துரைச்சாமி (பொறியியலாளர் - RDA. - கொழும்பு), கெங்காதேவி (ஜேர்மனி), றஞ்சனிமலர் (டென்மார்க்), சிவசிதம்பரம் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), ரமேஸ் (பொறியியலாளர் - கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் நடேசபிள்ளை, ஆறுமுகவடிவேல் (வவுனியா) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் மங்களேஸ்வரி (வவுனியா), அலங்காரம் (கொம்மந்தறை), தவபாக்கியசிகாமணி (கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனியும் நிசாந்த் (Q.S. - மொறட்டுவ பல்கலைக்கழகம்), நிசாந்தி, நிதர்சன், நிதுஷன், நிதுர்ஷிகா, நிகிதன், நிகிதா, நிருபன், சாரங்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் எதிர்வரும் (14.07.2005) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மயிலியதனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கம்பர்மலை,*
*உடுப்பிட்டி.* (37617)(38-11-34)

தகவல்:
M.துரைச்சாமி (மருமகன்)
T.P.: 021 2264273

## திருமதி இராயப்பு மரியமுத்து (நேசம்)



ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கைத்தொழிற்பேட்டை வீதி, அச்சுவேலியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராயப்பு மரியமுத்து 05.07.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை இராயப்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அமிர்தநாயகி, நீக்கிலாப்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் சகோதரியும் அன்ரனி மரியதாஸ், செபோ (தவராசா - பிரான்ஸ்), பாலேந்திரா றோஸ்மலர், அல்பேட் ஜெயராஜா (லண்டன்), காலஞ்சென்ற புனிதமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தங்கராணி,ஜெயந்தினி (பிரான்ஸ்), பாலேந்திரா றோஸ்மலர் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் அற்புதமலரின் சிறிய தாயாரும் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை, இரத்தினம், பேரின்பநாயகம் மற்றும் எலிசம்மா, அமிர்தநாயகம், பிலோமினா ஆகியோரின் மைத்துனியும் அன்ரன் பிரான்சிஸ் (Apba யாழ்.) சைலஜா, பவான் (பிரான்ஸ்), சுஜாதா (பிரான்ஸ்), றஜீவ் (NIT, மாணவன்), உதயன் (பிரான்ஸ்), சிவானி (இந்தியா) டனீசியஸ், தர்சன், டன்ஸ்ரன் (பிரான்ஸ்), சாரா (பிரான்ஸ்), சபீன் (லண்டன்), எவ்லின் (லண்டன்), கெவின் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜனு, செபோன், ஷெரோனி (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 13.07.2005 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் பூசைப்பலியின் பின் அச்சுவேலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைத்தொழில் பேட்டை வீதி,*
*அச்சுவேலி.* (37611)(29-11-34)

தகவல்
பிள்ளைகள்.

## ஈர விழிகளுடன் 31ஆம் நாள் நினைவஞ்சலி

**உதயம்** 02 - 10 - 1922



**அஸ்தமனம்** 14 - 06 - 2005

### அமரர் இளையதம்பி பொன்னம்பலம்

(நொத்தாரிஸ் - கிளாக்கும் மொழி பெயர்ப்பாளரும்)

அன்புடனும் பண்புடனும் எம்மோடு வாழ்ந்தீர்
ஆதரவாய் அரவணைத்து பாசமாய்ப் பழகினீர்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர் இளையதம்பி பொன்னம்பலம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண வைபவமும் நாளை (13.07.2005) புதன்கிழமை பகல் 10 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் மேற்படி வைபவத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மருதடி வீதி,
சாவகச்சேரி வடக்கு. (37569)(11-38-34) -குடும்பத்தினர்.


## Brighten Institute

**Chavakachcheri**

A/L எடுத்தவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

* Spoken English With Grammar
* Special English Spoken Course.

**Lectured by:-Mr.K.Nishanthan**
(Dip.in Eng.)

ஆரம்பம்:- **14.07.2005** - வியாழன At 9.30 a.m.
(செவ்வாய், வியாழன் - At. 9.30 a.m.)
பிரிவு II ஆரம்பம் **18.07.2005** At 5.00 p.m.
(திங்., புதன் - At. 5 p.m). (37604)

## தூரிகை

அழகுக்கலை,
**மனையியல் நெறிகள்**
புதிய பயிற்சி வகுப்புகள்
**ஆரம்பம் :**
**14.07.2005**

**ஓகன் இசைப்பயிற்சி**
செவ்., வியா. 3p.m. - 5p.m.

செங்குந்தா வீதி, கல்வியங்காடு.
ம.ம.வி. வீதி, நெல்லியடி.
(37592) T.P.: 0779143171

உ
சிவமயம்

## சதுர்ஷிகா திருமணசேவை

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் புரியும் மணமகன்களுக்கு பட்டம்பெற்ற அல்லது A/L படித்த, கிரகபாவம் குறைந்த அழகிய மணமகள்கள் தேவை. அத்துடன் B.A,B.Com,- B.Sc. பட்டம் பெற்ற மணமகன்களும் தேவை.

உடன் போட்டோ, ஜாதகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சந்திக்கும் காலம் : 11.07.2005 தொடக்கம் 20.07.2005 வரை
நேரம்: 9 a.m. –12.30p.m.
3.30p.m. –5.30p.m.

**முகவரி: திரு.N.கந்தையா**
C/O: R.சாந்தகுமார்
மூத்தநயினார் கோயிலடி,
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (37606)(38-11-34)


## வீதிகள் புனரமைப்பு

வரணி, ஜூலை12

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீட்டெடுக்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பகுதியில் மூன்று வீதிகளைப் புனரமைக்க வீதி அபிவிருத் தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, உடுப்பிட்டி மாலிசந்தி அல்வாய் வீதி, பொலிகண்டி, நவிண்டில் கரணவாய் வீதி மற்றும் செல்வச் சந்நிதி வீதி ஆகியவை புனரமைக்கப்படவுள்ளன.

(ஓ-170)

## வீதியைத் திருத்த கோரிக்கை

வளலாய்,ஜூலை12

கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு எதுவும் இன்றி உள்ள மானிப்பாய் கிழக்கு 'கம வீதி' யைப் புனரமைக்க ஆவன செய்யுமாறு மானிப்பாய் கிழக்கு விவசாய சம்மேளனம் யாழ்.மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கோரியுள்ளது.

(ஓ-178)

## விவசாயக்கடன்

உடுவில் கமநலசேவை நிலையத்தைச் சேர்ந்த விவசாய சம்மேளனங்களூடாக செலான் வங்கி விவசாயக்கடன்களை வழங்கமுன் வந்துள்ளது.

விவசாயக்கடன் திட்டத்தில் இணைந்து பயனடைய விரும்பும் உடுவில் வடக்கு விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த விவசாயிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு உடுவில் நாச்சி அமமன் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு வருகை தருமாறு மேற்படி விவசாய சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.(ஓ-152)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் இராசரத்தினம் விஜயகுமார்

(விஜி, கோப்பாய்)



எமது அன்புக்கும் மதிப்புக்குமுரியவரான **இராசரத்தினம் விஜயகுமார்** அவர்களின் (10.07.2005) மறைவு எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் தருகின்றது. அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**தயா நகைப்பூங்கா**
**213, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-42007)(38-11-34)

## கண்ணீர் அஞ்சலி

### சிவஞானசுந்தரம் கஜீபன்

(3ஆம் வருட மாணவன், வயம்ப பல்கலைக் கழகம்)



பொல்லாத காலனவன்- உனை
சொல்லாமல் எடுத்ததனால்
எல்லாமே குலைந்திற்று- இப்போ

சிட்டாக சிறகெய்தி
பட்டம் பெறச் சென்றவனே
உந்தன் வரவுதனை உறுதுணையாய் ஏற்பதற்கு
உன் சுற்றம் உன் நண்பர்கள்

அன்பான எமது நட்பினை
உன் அனலாய் வந்த செய்தி
சுட்டெரித்த கணப்பொழுதை
சொல்லியே மாளாது

**மலர்வு** 16.11.1980 **உதிர்வு** 06.07.2005

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பள்ளித் தோழர்கள்
யா/ மல்லாவி மத்திய கல்லூரி.

(37609)(38-11-34)


# Study in India

## இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு

**A/L சித்தியடைந்த மாணவர்களும், 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்**

- Garden City College Affiliated to Bangalore University
- SSM College of Engineering affiliated to Anna Engineering University
- Muthayammal Art and Science College affiliated to Periyar University
- Bishop Heber College affiliated to Bharathidasan University

### Courses

• B.E. Information Technology, • B.E. Computer Science and Engineering, • B.E. Electronics and Communication Engineering, • B.E. Mechanical Engineering, • B.Sc. Information Technology, • B.Sc. Computer Technology, • B.Sc. Apparel and Fashion Technology, • M.S.C. Information Technology • B.Sc. (Computer Science), • B.Sc. (Fashion & Apparel Design), • B.Sc. (Microbiology), • B.Sc. (Genetics), • B.Sc. (Biotechnology), • BCA. (Bachelor of Computer Applicants), • BBM. (Bachelor of Business Management), • BHM. (Bachelor of Hotel Management), • B.A. (Journalism), • B.Com (Computers) • B.Sc. Maths, • B.Sc. Phys • B.Sc. Electronics • B.Sc. Chemistry • B.Sc. Computer Science

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்திசெய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வியயில்கின்றனர்.

- ஆண்கள் – பெண்களிற்கு தனியான விடுதி வசதிகள்
- Student Visa எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும்
- கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்

2005ல் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் Pending Results உடன் இவ்வருடமே கல்லூரிகளில் சேர்ந்து பாடநெறிகளை தொடர முடியும். இதனால் மாணவர்கள் ஒரு வருடத்தை சேமிக்க முடியும்

அனேகமான கல்லூரிகள் யூலைமாதம் இரண்டாம் கிழமை தமது பாடநெறிகளை தொடக்கவிருப்பதால், உடனடியாக தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**MBBS** இலங்கை Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட Crimea Medical Institute - University (Ukraine) இல் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படுகின்றது ~ A/L, O/L சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு **Call 0777 - 767818 / (011) 4512591**

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo-06.

SKAds&Prints

# இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனம்! அப்பட்டமான போர்நிறுத்த மீறல்!!

## யாழ். பொது அமைப்புகள் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

திருக்கோணமலையில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இருவர் உட்பட நால்வர் படுகொலை செய்யப்பட்டமையானது இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடாகும்.

இது ஒரு படுமோசமான - அப்பட்டமான - யுத்தநிறுத்த மீறல் இவ்வாறு கண்டனம் தெரிவித்திருக்கிறது. யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்.

திருகோணமலைச் சம்பவம் தொடர்பாக மேற்படி ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் தாயகத்தில் இருந்து சிங்களப் படைகள் உடன் வெளியேறவேண்டும்.

திருகோணமலை செல்வநாயகபுரத்தில் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் இருவரும் இரு பொது மக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளமை தமிழர் மனங்களில் ஆறாத்துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனமான இச்சம்பவம் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். இச்சம்பவத்திற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். திருமலையில் ஏற்பட்ட இச்சம்பவம் மனித நேயமுள்ள எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இத்தாக்குதல் சம்பவங்களை யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதுடன், தனது ஆட்சேபத்தையும் தெரிவிக்கிறது.

திருமலை செல்வநாயகபுரத்திலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகம் மீது இராணுவத்தினர் தாக்குதல் தொடுத்துள்ளமையானது மீண்டும் ஒரு போரைத் தமிழ் மக்கள் மீது வலிந்து திணித்துள்ளமையை வெளிக்காட்டுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்ள விடுதலைப் புலிகள் அலுவலகத்தில் 10 பேர் அடங்கிய குழுவின் ஏ.கேரக துப்பாக்கி மற்றும் குண்டுகளுடன் வந்து தாக்குதல் மேற்கொண்டமையானது இராணுவத்தினர் தான் இத்தாக்குதலை மேற்கொண்டனர் என்பதைப் புலனாக்குகிறது.

திருகோணமலை நகர் பூராகவும் இராணுவ மயப்படுத்தப்பட்டு, வீதி தோறும் காவலரண் அமைத்து தொடர்ந்து தேடுதல் நடத்து வரும் இராணுவத்தினரின் கண்களில் மணணைத் தூவிவிட்டு வேறு யாரும் இந்த செயலை செய்யமுடியாது. அரச பயங்கரவாதத்தின் உச்சக்கட்டமாகவே இதனைக் கருதுகின்றோம். இதற்கு அரசு வேறு எந்த பொய்யையும் புனைய முடியாது.

நிராயுதபாணிகளாக நின்று யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அரசியல் பணிசெய்கின்ற விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான தாக்குதலை கடும் விசனத்துடன் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதல் நடத்தியதன் மூலம் சமாதானம் தூக்கில் இடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் இவ்வாறன சம்பவங்களை சிறீலங்கா படைகளும் அவர்களால் ஊக்குவிக்கப்படும் குழுக்களும் மேற்கொண்டு வருகின்றன. இதனை அரசு வெறுமனே பார்த்துக்கொண்டு நிற்கின்றது. சமாதானத்தின் மீது அரசுக்கு விருப்பமில்லாததையே இது எடுத்துக்காட்டுகிறது.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகமாகும். எமது மண்ணில் தமிழ் மக்கள் சுதந்திரமாக, சந்தோசமாக வாழவேண்டும் என்றால் தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து சிங்கள படைகள் அகற்றப்பட வேண்டும்.

இது ஒன்றுதான் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கான ஒரே வழியாகும். செல்வநாயகபுரத்தில் இராணுவத்தாக்குதலின் போது கடற்போராளி லெப்.கேணல் டிக்கன், போராளி இளம்புலி மற்றும் பொது மக்கள் இருவருக்கும் எமது வீரவணக்கத்தை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமலைத் தாக்குதல் சம்பவத்தால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

## திருமலைத் தாக்குதலில் வீரச்சாவடைந்தோர்

திருகோணமலை, ஜூலை12

திருகோணமலை செல்வநாயகபுரத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பணிமனை மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்தவர்கள் விவரம் வருமாறு:

லெப்டினன்ட் கேணல் டிக்கன் அல்லது வேங்கை (செபஸ்ரியாம்பிள்ளை ஜெயச்சந்திரன் - 6ஆம் வட்டாரம், பெரியகுளம், சாம்பல்தீவு)

இரண்டாம் லெப்டினன்ட் இளம்புலி (தங்கராசா விஜேந்திரராசா, கூனித்தீவு, மூதூர்)

நாட்டுப்பற்றாளர் முத்தையா கோணேஸ்வரன் பாபு (அன்பு வெளிபுரம், திருகோணமலை).

தேசியத் துணைப்படைவீரர் அனுசன் குலசிங்கம் ( 6ஆம் வட்டாரம், சாம்பல்தீவு, திருகோணமலை).

# அரசு தகுந்த நடவடிக்கை எடுக்காவிடில் விளைவு பாரதூரமானதாக இருக்கும்!

## கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம் அறிக்கை

திருமலைத் தாக்குதலுக்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறினால் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும்.

-இவ்வாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனம் கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியவர்கள் தமது வாகனத்தில் வந்து தாக்குதல் நடத்திவிட்டு இராணுவத்தின் உதவியோடு தப்பிச்சென்றுள்ளனர். இத்தாக்குதலை கடற்றொழில் சமூகத்தின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தாக்குதலோடு சம்பந்தப்பட்டவர்களை இனங்கண்டு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசும் அதன் படைகளும் முன்வரவேண்டும். தவறும் பட்சத்தில் இதற்கான விளைவுகள் பாரதூரமானவையாக இருக்குமென எச்சரிக்கின்றோம். கடற்றொழில் சமூகத்தின் சார்பில் மறைந்த மாவீரர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம - என்றுள்ளது.

(ஒ)

# தமிழர்கள் மீது போரை வலிந்து திணிக்க முயல்கிறது பேரினவாதம்

## திருமலைச் சம்பவம் குறித்து மாவை சேனாதிராசா அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை12

தமிழ்த்தேச மக்களிடம் வலிந்து போரைத் திணிக்கும் செயலாகவே திருமலைச் சம்பவத்தைக் கருதவேண்டியுள்ளது. இதற்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டும் என்று தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

திருமலைச் சம்பவத்தைக் கண்டித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலை, செல்வநாயகபுரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் டிக்கன் உள்ளிட்ட இரு போராளிகளும் இரு பொதுமக்களும் இராணுவச் சீருடை அணிந்து வந்த துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

திருகோணமலைப் பட்டினத்தை அண்டிய உச்ச பாதுகாப்பு வலயத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற இப்படுகொலைகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறிய செயல் மட்டுமல்லாமல் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் சமாதானச் சூழ்நிலையையும் சீர்குலைத்துள்ளதாகவே கருதுகிறோம்.

தமிழ்த்தேசிய இனத்தை அடக்கி, ஒடுக்கி அழித்துவிடக் கங்கணங்கட்டி நிற்கும் பேரினவாத சக்திகளினதும் அந்த எண்ணத்துடன் செயற்படும் இராணுவத்தினதும் இத்தகைய தொடர்நடவடிக்கைகள் தமிழ்த்தேச மக்களிடம் வலிந்து போரைத் திணிக்கும் செயலாகவே கருதவேண்டியுள்ளது. இதற்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டும்.

இன, மத முரண்பாடுகளின் எரிமலையாகத் திருமலை கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. இதனை வெடிக்கவைத்திடும் முயற்சியில் சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகள் இராணுவச் சீருடையில் திருமலையில் மையங்கண்டு நிற்கின்றன. இதற்கு பௌத்த சீருடைகளும் முனைப்புடன் முன்னணி வகிக்கின்றன. இதற்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளமையை நாம் அறிவோம்.

இச்சந்தர்ப்பத்தில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியும் அரசும் உடன் விரைந்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்துப் போரைத் திணித்து நிற்கின்ற பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளைக் கட்டுப்படுத்தவேண்டும்; திருமலையிலிருந்து வெளியேற்றவேண்டும் எனக் கோருகின்றோம்.

இதற்குப் பொருத்தமான இராஜதந்திர நடவடிக்கைகளை சர்வதேச சமூகமும் இராஜதந்திரிகளும் எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

பௌத்த - சிங்கள பேரினவாதத்திற்கெதிரான அனைத்து ஜனநாயக சக்திகளும் தமிழ்த்தேசப் பற்றுள்ள மக்களும் அணிதிரண்டு எத்தகையதொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளவும் மக்கள் போராட்டங்களை நடத்தவும் ஆயத்தமாகுமாறும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அறைகூவி அழைக்கின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying



Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ் ⇆ கொழும்பு | யாழ் ⇆ திருகோணமலை ⇆ கொழும்பு



தில்லையம்பதியாள் துணை

கோண்டாவில் தில்லையம்பதி
அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
ஆனி உத்தர ஆர்த்திரா தரிசனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் பார்த்திப வருடம் ஆனித் திங்கள் 29ஆம் நாள் (13.07.2005) புதன்கிழமை அதிகாலை 3.00மணிக்கு அபிஷேகமும் 4.00மணிக்கு பஞ்சமுக அர்ச்சனையும் 5.00மணிக்கு ஆர்த்திரா தரிசனமும் அதனைத் தொடர்ந்து ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜபெருமான் உள்வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறும்.



தில்லையம்பதி,
கோண்டாவில்.

விழா உபயம்
இ. கந்தையா குடும்பம்.

இங்ஙனம்
திருக்கோயில் பரிபாலன சபை.

(37636)



தில்லையம்பதியாள் துணை

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

கோண்டாவில் தில்லையம்பதி
அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
பஞ்சதள இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா

அம்பிகை அடியார்களே!

நிகழும் பார்த்திப வருடம் ஆனித்திங்கள் 29ம் நாள் (13.07.2005) புதன்கிழமை பூர்வபக்க ஷஷ்டிதிதி உத்தரமும் சிங்கலக்கினமும் கூடிய சுப நேரம் காலை 7.40 மணி முதல் 8.35 மணி வரை வரும் நன்நாளில் இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற திருவருள் கை கூடியுள்ளது. அம்பிகை அடியார் பெருமக்கள் அனைவரும் கலந்து சிறப்பித்து அம்பிகையின் திருவருளைப் பெற்று ஆனந்தம் அடைவீர்களாக. அம்பிகையின்இராஜகோபுர திருப்பணி முழுமையாக நிறைவு செய்வதற்காக தங்களால் இயன்ற நிதி உதவிகளை வழங்குவதோடு தங்களின் திருக்கரங்களால் இராஜகோபுரத்துக்கான கல்லை நாட்டி கோபுரம் முழுமை பெற உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம். அடிக்கல் நாட்டு வைபவத்தை முன்னைநாள் போஷகர் திரு. கா. பொன்னையா அவர்கள் ஆரம்பித்து வைப்பார்.

இராஜகோபுர நிர்மாணிப்பு :
இந்தியா தமிழகத்தை சேர்ந்த சிற்பவல்லுனர்
திரு.செ. ஞானமூர்த்தி அவர்கள். அரச அங்கிகாரம் பெற்ற ஸ்தபதி மாமல்லபுரம்.
* நிதி வழங்க விரும்புவோர் S/A10712 மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழகக் கணக்கு இலக்கத்திற்கு அனுப்பவும்.

தில்லையம்பதி,
கோண்டாவில்.

இராஜகோபுர திருப்பணி சபையினரும்,
திருக்கோயில் பரிபாலன சபையினரும்.

தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்



(37637)

## முதலாம் வருட இதய அஞ்சலி

அன்னை மடியில்வந்தது 05 - 08 - 1984



இறைவன் அடியில்சேர்ந்தது 22 - 06 - 2004

### அமரா நவரத்தினராசா நிமல்


எமது பாசப்புறாவே! நிகரிலா அன்புள்ள நிமலே!
ஆறாய்ப் பெருகும் அன்பின் உணர்வு அலைகள்
எம்மை வந்து நிதம் வாட்டுதே! ஐயா!
எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து போவதற்கு
எப்படித்தான் மனம் வந்தது ஐயா? நீங்கள்
எம்மை விட்டு மறைந்து போனாலும் உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கும்!
எப்போதும் உங்களை மறக்கவே மாட்டோம்!

என்றும் உம் நினைவுடன் வாழும்
லோகேஸ்வரசர்மா (பெரியப்பா)
திருமதி புவனேஸ்வரி (பெரியம்மா).

கொழும்புத்துறை.

(37615)(32-11)

## விண்ணுலகில் ஓராண்டு...



### அமரர் தேவராசா உதயகுமார் [B.Com]

(கிளிநொச்சி தொழிநுட்பக்கல்லூரி உத்தியோகத்தர்)

மண்ணில் :22.10.1975
விண்ணில் :11.07.2004

அரிய நல் உறவிழந்து
ஆண்டொன்று ஆனதடா
ஆறாப் பெரும் துயர் சுமந்து
ஆறவில்லை எம் நெஞ்சம்
இகத்தினிலே உனைப்பிரிந்து
ஈரவிழி நீர் சுமந்து
உற்ற உன் உறவுகளும்
ஊராரும் நண்பர்களும்
எக்காலம் காண்பதென
ஏக்கமுடன் தவிக்கின்றோம்.
மாறாத உன் சிரிப்பும்
மறையாத உன் முகமும்
மனமுருகும் உன் குரலிசையும்
மீண்டும் வராதோ எம் முன்னே ?
நண்பா ! ஓராண்டென்ன
நாம் வாழும் வரை
எம்முள்ளே நீயும் வாழ்வாய் !

-பல்கலை. நண்பர்கள்.

(37593)(51-11-19)

## மின்சேவை நிலையங்களுக்கு விரைவில் வாகன வசதி

வரணி,ஜூலை12

இலங்கை மின்சாரசபையின் சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் உள்ள சேவை நிலையங்களுக்கு வாகன வசதிகள் வழங்கப்படவுள்ளதாகவும் -

இதற்கான ஏற்பாட்டை வட மாகாண மின்சாரசபை மேற்கொண்டுள்ளதாகவும் - கூறப்படுகிறது.

(ஒ-170)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறும்.

(ஜ-139-202)

## 4 நூல்களின் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை12

கொழும்பு தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட 4 நூல்களின் அறிமுக விழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பொது மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கவிஞரும் எழுத்தாளரும் நாடக நடிகருமான அன்ரன் செலவக்குமாரின் 'அந்தரிக்கும் ஆன்மா' (கவிதைத் தொகுதி), 'வானத்துப் பெண் ஏன் கண்ணீர் வடிக்கின்றாள் ?' (புதுக் கவிதைத் தொகுதி), 'குமாரத்தி' (சிறுகதைத் தொகுதி), 'சுனாமியே உனக்கு கருணையே கிடையாதா?' (கவிதைத் தொகுதி) ஆகிய நான்கு நூல்களே அறிமுகப்படுத்தப் படவுள்ளன.

புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வண.பிதா ஜேம்ஸ சிங்கராயர் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்துகொள்வர்.

(ஜ-202)

## நிதி ஒதுக்கீடு

மாசேரி - இடைக்குறிச்சி ஊரெல்லை வீதி புனரமைக்கப்படவுள்ளது.

இதறகான நிதியை சாவகச்சேரி பிரதேசசபை ஒதுக்கியுள்ளது. இதேவேளை, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் மலசலகூடம் திருத்தவேலை, அதிபர் அறை புனரமைப்பு, உத்தியோகஸ்தர் மலசலகூடம் புனரமைப்பு - வகுப்பறைகள் அமைத்தல ஆகிய வேலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஒ-170)


## விளையாட்டு வீரர்களுக்கு ஓர் நற்செய்தி



இறக்குமதி செய்யப்பட்ட அதிஉன்னத தரம் வாய்ந்த பக்க விளைவுகளற்ற புரதம், விட்டமின்கள்,தாதுக்கள் அடங்கிய பால்மா. விளையாட்டு (Athlets) மற்றும் உடற்பயிற்சி பளுதூக்கும்(Body building, Weight lifting) வீரர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்டது.

ஏக/விநி:Neutri Max 21/1, Terrance Av, Mt.Laviniya, Tel: 077788991

யாழ் முகவர்: Life Style Fitness Club,
கூழாவடி, ஆனைக்கோட்டை Tel: 0212225697, 0777174895, 0773256557




யா/புனித ஜோன் பொஸ்கோவின

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியை

### திருமதி சியாமளா இராமச்சந்திரன்

அவர்களின் அன்புத் தந்தை



### சின்னத்தம்பி மார்க்கண்டு

[ஓய்வுபெற்ற ஆசிரியர்]

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் அமரருக்குக் கண்ணீர் அஞ்சலியையும்தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்,
பழைய மாணவர்கள்.

(சி/44206)(32-11)

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### மரியாம்பிள்ளை வில்லியம் ஜெயராஜா

(நீர்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்.)

பிறப்பு 20-04-1949
இறப்பு 12-07-1989

எங்கள் அன்புத் தெய்வமேயூ
எங்கள் இதயம் துடிக்கும் வரை
உங்கள் நினைவலைகள்
எங்கள் இதயங்களில் துடித்துக் கொண்டே இருக்கும்.

891, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-42009)

மனைவி, மகள், தாய்,
சகோதரர்கள், உறவினர்.



## அமரர் Dr.மயில்வாகனம் இராசையா

(பொறுப்பதிகாரி, வேலணை அரசினர் வைத்தியசாலை)
(ஊரிக்காடு)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும் சபிண்டீகரண அழைப்பும்

அன்னை மடியில் : 14-06-1935
ஆண்டவன் மடியில்: 12-06-2005

12.06.2005 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் Dr.மயில்வாகனம் இராசையா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எமது இல்லத்தில் இன்று(12.07.2005) செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறும். அத்தருணம் இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர் களுக்கும் தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாவலடி, ஊரிக்காடு.
வல்வெட்டித்துறை.

(37449)(50-11-19)

# மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் யாழ். பாடசாலைகளுக்கு கூடுதல் இடங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை12

வவுனியாவில் நடைபெற்றுவரும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் இது வரை நடந்த ஆட்டங்களில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் மாகாணச் சம்பியனாகத் தெரிவாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் வரை நடந்த போட்டிகளின் முடிவுகள் வருமாறு-

**கரபந்தாட்டம்**

அம்பாறை சாந்த மடுவில வித்தியாலயம், திருகோணமலை சேருவில வித்தியாலயம், அம்பாறை டெமடமல்பலாச வித்தியாலயம்.

**வலைபந்தாட்டம் - பெண்கள்**

*15* வயது - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா வித்தியாலயம், அம்பாறை கலகிட்டியகொட ம.வி.

*17* வயது - உடுவில் மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, அம்பாறை ரஜகலதென்ன வித்தியாலயம்.

*19* வயது - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வவுனியா றம்பைக்குளம் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு வந்தார முல்லை.ம.வி.

**எல்லே**

*19* வயதுப் பெண்கள் - மட்டக்களப்பு செங்கலடி ம.வி., திருகோணமலை அபயபுர ம.வி., திருகோணமலை தெவிட்டவிட்ட வித்தியாலயம்.

**கூடைப்பந்து**

*19* வயதுப் பெண்கள் - கொக்குவில் இந்துக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, திருகோணமலை சென்.மேரிஸ்.

*19* வயது ஆண்கள் - மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி, யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி.

**மேசைப்பந்து**

*19* வயதுப் பெண்கள் - திருகோணமலை சென். மேரிஸ் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு வின்சன்ஸ் உயர்தர பாடசாலை.

*19* வயது ஆண்கள் - யாழ்.மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**சதுரங்கம்**

*15* வயது ஆண்கள் - யாழ்.இந்துக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, கிளிநொச்சி வட்டக்கச்சி ம.வி.

*15* வயதுப் பெண்கள் - கிளிநொச்சி வட்டக்கச்சி ம.வி., வேம்படி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

*19* வயது ஆண்கள் - யாழ். இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, முல்லைத்தீவு வித்தியானந்தா.

*19* வயதுப் பெண்கள் - வேம்படி மகளிர் கல்லூரி, புதுக்குடியிருப்பு சி.சி.ரி.எம். எஸ்., கொக்குளாய் ஜி.ரி.எம். எஸ்.

**பூப்பந்து**

*19* வயது ஆண்கள் - கல்முனை அல் அஜ்ரக் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி, உடுவில் ஆண்கள் வித்தியாலயம்.

*19* வயதுப் பெண்கள் - உடுவில் மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, அம்பாறை டி.எஸ். சேனாநாயக்கா.

**உடற்பயிற்சி**

பெண்கள்- வவுனியா றம்பைக்குளம் மகளிர் கல்லூரி, கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்குகரை வித்தியாலயம், மானிப்பாய் மகளிர் கல்லூரி.

ஆண்கள்- யாழ்.புனித அந்தோனியார் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, கொக்குளாய் ஜி.ரி. எம்.எஸ். (3-164- 202)

# முல்லை. மாவட்டப் போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கிரிக்கெட், கரபந்தாட்டம், எல்லே ஆகிய போட்டிகள் சகல பிரிவினர்களுக்கும் நடத்தப்பட்டன.

10 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் யோகபுரம் ம.வி அணிக்கும் முல்லைத்தீவு ம.வி அணிக்கும் இடையே நடைபெற்றது. இதில் முல்லைத்தீவு ம.வி. அணி வெற்றிபெற்று சம்பியனானது.

இரண்டாவது இடத்தை யோகபுரம் ம.வி. அணியும், மூன்றாம் இடத்தை மல்லாவி மத்திய கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன.

கரபந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

நாட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை, ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, கலைமகள் வித்தியாலயம்.


**17 வயதுப் பிரிவு**

கலைமகள் வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, நாட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை.

**19 வயதுப் பிரிவு**

செம்மலை மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி.

19வயதுப் பிரிவுப் பெண்களுக்கு நடத்தப்பட்ட எல்லே போட்டியில் புதுக்குடியிருப்பு றோ.க. வித்தி., புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, மாங்குளம் ம.வித்தி. ஆகியன வெற்றிபெற்றுள்ளன. (3-353- 203)



பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் யாழ். வீதி ஞானக்குழந்தை இல்லத்தின் 13ஆவது வருடாந்த விளையாட்டுவிழா கடந்த சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் இ.ஓங்காரமூர்த்தி வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்குப் பரிசினை வழங்குதைப் படத்தில் காணலாம். *(படம்:- தமிழினியன்)*

# சென். பற்றிக்ஸை வென்றது கண்டி திருத்துவக் கல்லூரி

யாழ்ப்பாணம்,ஜூலை12

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் கண்டி திருத்துவக் கல்லூரி அணியினருக்கும் இடையிலான 40 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கண்டி திருத்துவக் கல்லூரி 6 விக்கெட்டினால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 32.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும்இழந்து107 ஓட்டங்களைப்பெற்றது.

ஜெனராஜ் 30 ஓட்டங்களையும், யதிஸ்வரன் 23 ஓட்டங்களையும், ஜெயந்தன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

முனசிங்க 2 விக்கெட்டுக்களையும், தும்பறக்கங்கா 3 விக்கெட்டுக்களையும் ஜெயசிங்க, யலின், அதிகாரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கண்டி திருத்துவக் கல்லூரி அணி 26.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

கங்கோட 34 ஓட்டங்களையும், முனசிங்க 32 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றனர்.

கொலின் 2 விக்கெட்டினையும், விதுபாலா, ஜீனத்ராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (3-86-190)

# ரெனிஸ் சுற்றுப்போட்டி யாழ்ப்பாணக் கல்லூரியில்

யாழ்ப்பாணம்,ஜூலை12

லூத்தர் செல்வராஜா ஞாபகார்த்த ரெனிஸ் சுற்றுப்போட்டி கடந்த 10 வருடங்களில் மீண்டும் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் மேற்படி ரெனிஸ் சுற்றுப்போட்டி இரண்டு சுற்றுக்களாக நடத்தப்படவுள்ளது.

முதற்கட்டமாக பாடசாலை மட்டத்தில் நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதற்கிணங்க 50 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு போட்டித் தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக வெளிவாரியாக அனைவரும் பங்குகொள்ளும் மாவட்ட மட்ட ரெனிஸ் போட்டி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இரண்டு சுற்றுக்களிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் ரெனிஸ் வீரர்களுக்கு விருதுகளும், கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என லூத்தர் செல்வராஜா ஞாபகார்த்த விளையாட்டுக் குழுத் தலைவர் என்.ஏ.விமலேந்திரன் தெரிவித்தார். (3-185)

# தாச்சி ஆட்டம்

கைதடி,ஜூலை12

தென்மராட்சி விளையாட்டுத்துறை மற்றும் யாழ். மாவட்ட தாச்சி சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் தென்மராட்சி தாச்சி சங்கம் தென்மராட்சி பிரதேச ரீதியாக நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

- 4.30 மணி- உதயசூரியன் வி.க எதிர் நாவற்குழி சரஸ்வதி வி.க.
- 5.30 மணி- விநாயகர் வி.க எதிர் குமரகுரு வி.க. (3-75-204)

# உடையார்கட்டில் விளையாட்டு விழா

புதுக்குடியிருப்பு,ஜூலை12

உடையார்கட்டு கலைமகள் முன்பள்ளி விளையாட்டு விழா பாடசாலை முன்றிலில் இடம்பெற்றது.

முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.நடேசபிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மங்கள விளக்கினை குரவில் தமிழ் வித்தியாலய அதிபர் மேகநாதன் மற்றும் திருமதி சுவாமிநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை உடையார்கட்டு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழரசனும், தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை அபிவிருத்திப்பிரதேச இணைப்பாளர் அ.லக்ஷமனும் முன்பள்ளி மேம்பாட்டுப் பேரவைக் கொடியை பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளரும் சமூக மேம்பாட்டுக் கொடியை கிராம இணைப்பாளர் ராதாவும் முன்பள்ளிக்கொடியை திருமதி விஜய மோகனாவும் ஏற்றிவைத்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் இந்நிகழ்வில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். (3-410-353)

## விளையாட்டு

## கே.ஸி.ஸி.கிண்ண கிரிக்கெட்

# ஸ்கந்தாஸ்ரார் 65 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை12

ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழகமும் அரியாலை விளையாட்டுக் கழகமும் மோதிய ஆட்டத்தில் ஸ்கந்தாஸ்ரார் அணி 65 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் வி.க. அணி 6 விக்கெட்டுகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது.

யசிதரன் 62 ஓட்டங்களையும், நிஷாகரன் 23 ஓட்டங்களையும், ஜெனக்ஸ் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

காண்டீபன் 2விக்கெட்டையும், குகதாசன் மகேந்திரராஜா, றொகன்குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை வி.க. அணி 8 விக்கெட்டுகளை இழந்து 101 ஓட்டங்களைப்பெற்றது.

பிரதீபன் 32 ஓட்டங்களையும், ரமேஸ் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

டெமியன்ஸ், ர.வரேந்திரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் நிரேஷன், நரேந்திரன், முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். ஸ்கந்தாஸ்ரார் வி.க. அணி 65 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்த ஆட்டம் 2 மணித்தியாலயம் பிந்தி ஆரம்பித்ததால் 5 ஓவர் குறைத்து 25 ஓவர்கள் கொண்டதாக நடந்தது. (3-190)

# பரபரப்பான ஆட்டத்தில் யங்ஸ்ரார் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை12

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிய பரபரப்பான ஆட்டத்தில் யங்ஸ்ரார் ஓர் ஓட்டத்தால் வென்றது.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் வி.க.அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.

சுஜீவன் 67ஓட்டங்களையும், ஜெனிற்றன் 52 ஓட்டங்களையும் பினேஸ் 56 ஓட்டங்களையும் சசிவர்மன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

கோபிநாத், ராஜஅஜித்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் நாதன், ஜெயரூபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் வி.க.அணி 30 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது.

லக்ஸ்மிகாந் 92 ஓட்டங்களையும் அருண் 34 ஓட்டங்களையும், ஜனந்தனன் 37ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

கிருஸ்ணசந்திரா, சசிவர்மன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ஜெனிற்றன் 2 விக்கெட்டுகளையும் பினேஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஜொலிஸ்ரார் கடைசிப்பந்தில் இரண்டு ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் விக்கெட்டை இழந்ததால் யங்ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.

பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டம் ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்தது.(3-190)

# யாழ்.பல்கலை. அணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.பல்கலைக்கழக அணியும் ஸ்ரான்லி அணியும் மோதியதில் யாழ்.பல்கலைக்கழக அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி வி.க. அணி 30 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது.

காந்தன் 58 ஓட்டங்களையும், றஜனிகாந் 28 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

ஜெயந்தன் 4 விக்கெட்டுக்களை ரவி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பொடுத்தாடிய பல்கலைக் கழக வி.க. அணி 23.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

சர்வானந்தன் ஆட்டம் இழக்காமல் 54 ஓட்டங்களையும் தனுஸ்காந் 36 ஓட்டங்களையும் மணிவண்ணன் 24 ஓட்டங்களையும் கௌரிபாகன் 19 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். ரஜனிகாந் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். யாழ். பல்கலைக்கழக அணி 7விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (3-86-190)

# ஜொலிஸ்ரார் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை12

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் அரியாலை மத்தி விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் நடந்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்தி விளையாட்டுக்கழகம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 93ஓட்டங்களை மட்டும் பெற்றது.

சண்முகலிங்கம், டினேஸ் ஆகியோர் முறையே 14,11 ஓட்டங்களை ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக் கொண்டனர்.

நாதன்,கோபிநாத் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜனார்த்தனன், ஆதவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

கே.ஜதுகுலன், கோபி, லட்சுமிகாந் ஆகியோர் முறையே 24,17,13ஓட்டங்களைப் பெற்றனர்.

மகேந்தி, சண்முகலிங்கம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.(3-86-190)

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்




இந்தியாவிலிருந்து வந்துள்ள
**ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்**
கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் O1, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி).
யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373. (37279) (26-14-49)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை
(பருத்தித்துறை)

மாணவன் செல்வன் **சூ.கஸ்ரின்**

11 வயது கீழ்ப்பிரிவில் - மாவட்டமட்ட மெய்வல்லுநர் போட்டியில், சம்பியன் விருது பெற்றுள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

(37591)(46-34-19-24) - பாடசாலைச் சமூகத்தினர்.



## இயந்திர மூலம் குழாய்க்கிணறு அமைத்தல்

**இயந்திர மூலம் 6" விட்டமான குழாய்க்கிணறு 3 மணித்தியாலத்தில் அமைத்துக் கொடுக்கப்படும்.**

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**ந. பாலகிருஷ்ணன்**
கலைவாணி மில் ஒழுங்கை
(Farm School Lane),
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P:- 0777290266, 0777512943.
(36937) (54-


## வீட்டுத்திட்டத்துக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை12

பருத்தித்துறை, பொலிகண்டி கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிப்படைந்தவர்களுக்கான வீட்டுத்திட்டத்தைச் செயற்படுத்த 20 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பான் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்த வீடமைப்புத் திட்டத்திற்கான ஆரம்பக் கொடுப்பனவாக ஐ.நா.கபிற்றஸ் நிறுவனம் பருத்தித்துறை பொலிகண்டி கிழக்கு சமூக அபிவிருத்திச் சபையிடம் இந்த நிதியை வழங்கியுள்ளது. இவ்வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு சமீபத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் ஆழிப்பேரலை அனர்த்த செயற்குழுப் பணிப்பாளர் எஸ்.பாலையா, ஐ.நா. கபிற்றஸ் நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் கே.இராசதுரை, நிர்வாகப் பொறியியலாளர் ஆர்.சுரேஸ்குமார், சமூக மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆர்.சாந்தகுமார், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-ரி)

## விஞ்ஞான சஞ்சிகைக்கு ஆக்கம் அனுப்பலாம்

வலி.தெற்கு,ஜூலை12

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் விஞ்ஞான சஞ்சிகைக்கு தரமான ஆக்கங்கள் ஆசிரியர்கள், மாணவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்கள் யாவும் வலயரீதியாக கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கபடவேண்டும்.

வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து தரமான ஆக்கங்களை ஆசிரியர்களும் மாணவர்களும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக அதற்குப் பொறுப்பான விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.விஜயேந்திர சர்மாவுக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-152)

## மீனவர் சமாசத்தின் அலுவலகம் திறப்பு

வலி.தென்மேற்கு,ஜூலை12

வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் மாதகல் பிரதான வீதியில் அலுவலகம் ஒன்றை அண்மையில் திறந்துள்ளது. மாதகல் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள கட்டடத்தில் இந்த அலுவலகம் செயற்பட்டு வருகின்றது. (ஒ-135)


## BAIRAHA
### புறொயிலர் குஞ்சுகள் விநியோகம்

35 நாளில் 2 kg மேல் வளர்ச்சியடையக் கூடிய தரமான நம்பர் - I பகிரா புறொயிலர் குஞ்சுகள் 13-07-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

தொடர்பு
* றாஜீவ் பாம் - நவாலி றோட், ஆனைக்கோட்டை.
  கிளை:
* தாரகை கால் நடைத் தீவன விற்பனை நிலையம் - முதலாம் கட்டை, பருத்தித்துறை.
* றஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட்.
* மதுரா - 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
* மாருதிபாம் - வழக்கம்பரை, தொல்புரம்.
* றாதா - மாவடி, வட்டுக்கோட்டை.
* கௌரி கால்நடைத்தீவன விற்பனை நிலையம் - பிரதான வீதி, பண்டதரிப்பு.

T.P.No:. 222 3529, 222 2867, 0776090926
(37601)(46-19-34-24)



## Save the Children
in Sri Lanka

### Expression of interest for partnership

Save the Children in Sri-Lanka (SCiSL) will start a three year period project in Jaffna, funded by USAID. The main objective is to insure inclusion of children affected by the conflict. The project will focus on community-based approaches, social mobilization.

The SCiSL is looking for experienced and committed partners in the following areas:
- Community and social mobilization
- Child participation/ child rights
- Social work in communities

***Essential requirements***
- Extensive experience working in Jaffna peninsula
- Excellent understanding of child protection government bodies
- Good knowledge of the areas of the main issues affecting children

***Method of selection***

All organizations interested in this project will get a 3 pages application form which can be collected from SCiSL office in Jaffna. A selection committee will identify potential partners. An organizational assessment of potential partner will determine the selected partners.
(C/43990)(42)



## முதலாவது பிறந்தநாள்

சசீகரன் - வதனி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**S.அலக்ஷன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (12-07-2005) செவ்வாய்க்கிழமை சுவீடனில் உள்ள தனது இல்லத்தில் மிகவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

18/1, றக்கா வீதியைச் சேர்ந்த அப்பப்பா தர்மலிங்கம், அப்பம்மா சரஸ்வதி, சித்தா சதீஸ், அன்ரா சரிதா, அத்தை வித்யா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் அலக்ஷன் குட்டியை நல்லூர் கந்தன் அருள்பெற்றுப் பல்கலைகளையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துகள்



செல்வன் S.அலக்ஷன்

18/1, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (37583) (24-34-19)

தகவல்: சி.தர்மலிங்கம் (அப்பப்பா).

HAPPY BIRTHDAY



உ
அம்பாள் துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஆனி மாதம் 29ஆம் நாள் நாளை [13-07-2005] புதன்கிழமை பிற்பகல் 1.33 தொடக்கம் 2.18 மணிவரையுள்ள துலா லக்கினமும் சித்த யோகமும் கூடியுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்,



மணமகன்
எங்கள் புத்திரன்
திருநிறை செல்வன்
**தயாகரன் (கரன்)**
B.Sc. Elect. Engr.
(கனடா)

மணமகள்
எங்கள் புத்திரி
திருநிறை செல்வி
**றோசாவதி (றோசா)**
Nurse (G.H. Jaffna)

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு ஸ்ரீ வல்லிபர ஆழ்வார் தேவஸ்தானத்தில் திருமாங்கல்யதாரணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி
**வ.பூபாலசுந்தரம்**
(இணை அதிபர் & J.P.)
கொண்டாதோட்டம்,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

திரு.திருமதி
**வ.தியாகராசா**
பெரியதம்பிரான் கோயிலடி,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

(இருவீட்டார் அழைப்பு)



உ
ஐயப்பன் துணை



அனலையம்பதி நயினாகுளம்
கூழாவடியுறை
**அருள்மிகு ஸ்ரீ அரிஹரபுத்திர ஐயனார் திருக்கோயில்**

## பெருந்திருவிழா விஞ்ஞாபனம்

**ஐயன் அடியார்களே!**

இன்று (12.07.2005) செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் எமது ஐயனார் ஆலயப் பெருந்திருவிழா தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

12.07.2005 செவ்வாய் பகல் 12 மணிக்குக் கொடியேற்றம்
17.07.2005 ஞாயிறு பகல் கைலாச வாகனத் திருவிழா
18.07.2005 திங்கள் மாலை வேட்டைத் திருவிழா
19.07.2005 செவ்வாய் இரவு சப்பரத் திருவிழா
20.07.2005 புதன் காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழா
21.07.2005 வியாழன் காலை தீர்த்தோற்சவம், இரவு கொடியிறக்கம்
22.07.2005 வெள்ளி இரவு திருக்கல்யாணம்
23.07.2005 சனி காலை பிராயச்சித்த அபிசேகம், மாலை வைரவர் பொங்கல்

பிரதமகுரு :
*வேத சிவாகம ஜோதி வை.தியாராஜாக் குருக்கள் - ஊரெழு*

ஆலயகுரு:
*அரவிந்தக் குருக்கள், கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் - அனலைதீவு*

**பத்துநாளும் அன்னதானம் வழங்கப்படும்.**

ஆலயப்பணிக்கு உதவ விரும்புவோர்:

**சேமிப்புக் கணக்கு இல. 500-21-2005517-0**

**இலங்கை 2 ஆம் கிளை, யாழ்ப்பாணம்**
**என்ற இலக்கத்துக்குப் பணத்தை வங்கியிலிடலாம்.**

**அடியார்கள் அனைவரும் வந்து அருள்பெற்றுய்யுமாறு, அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.**

ஐயனார் திருக்கோயில்,
அனலைதீவு - 05.

**- ஆலய பரிபாலன சபையினர்.**

(37595) (32-34-19-24)

விளம்பர அனுசரணை:
*திரு. லயன் கனகசபை சுந்தரலிங்கம்*
சமாதான நீதவான் (காரை.மணிகண்டன்).

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



விஸ்வப் பிரம்ம குல திலகர்
அமரர்
**துரையப்பா பரமானந்தம் பத்தர்**
திதி: அபரபக்க ஷஷ்டி

தோற்றம்: 27.09.1929 மறைவு 04.07.2003

ஆண்டு இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறுதில்லை எம்மனம்
ஈண்டு உமது நினைவுடனேயே
இப்பூவுலகில் நாம்
வாழ்கின்றோம். ஸ்ரீ காமாஷி அம்பாள்
திருவடி நிழலில்
சேர்ந்திருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

(37628) (14-17-25) குடும்பத்தினர்.

18/5, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்.வடமேற்கு, யாழ்ப்பாணம்.

## 19 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
**திருமதி பராசக்தி பரலசிங்கம்**



24.06.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்திகேட்டு வந்து ஆறுதல் கூறியோருக்கும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (12.07.2005) செவ்வாய்க்கிழமை நடைபெறும் இவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

காளிகோயிலடி,
மூளாய். (37634) (14-17-25)

இவரின் பிரிவால் கலங்கிநிற்கும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சமையலுக்கு உடனே ஆள் தேவை

வடமராட்சியில் புதிதாகத் திறக்கப்படவுள்ள மாலை நேரச் சாப்பாட்டுக் கடைக்குக் குறிப்பாக மசாலா தோசை, நூடில்ஸ், கோழிக்கறி என்பன சுவைபடச் சமைப்பதற்கு ஆள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

உடனே நேரில் வரவும்.

296, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(37630) (14-17-25)

**ஜமஹா பிளாஸா**

**நாதனீஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்டது.
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல்
நடித்த
**6'.2''** (ரீலஸ்)
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
வெகுவிரைவில் அர்ஜுன், சினேகா நடித்த **சின்னா**
(சி-43363)

உ
கோகிலாகண்டி - கைதடி நாவற்குழி
**ஐயனார் ஆலய மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்**
**எண்ணெய்க்காப்பு - 12.07.2005**
**செவ்வாய்க்கிழமை**
காலை 10.00 மணிதொடக்கம் 3.00 மணிவரை

பிரதமகுரு: தியாக. கெங்காதரக்குருக்கள்
புன்னாலைக்கட்டுவன்.
சர்வசாதகர்:தியாக. சக்திதரகுருக்கள்
மறவன்புலோ.
ஐயப்பன் தொண்டர்களும்
பரிபாலன சபையினரும் - கோகிலாகண்டி.
(37647) (54-14-17-25)

## கொழும்பில் சமையல்வேலை செய்ய ஆள் தேவை

கொழும்பிலுள்ள நிறுவனமொன்றில் சைவ, அசைவ உணவுகள் சமையல் செய்வதற்கு (ஆண்) ஆள் தேவை. விரும்புவோர் உடனே கீழ்க் காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

**வே. செல்வராசா**
பிரசாத் வீதி, நவாலி கிழக்கு.
மானிப்பாய். (37644) (54-14-17-25)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
சுப்ப ஸ்ரார் விஜயசாந்தியின்
**சூர்யா** (ரீலஸ்)
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே).
(C-11480(29-16)

**ராஜா யாழ்ப்பாணம்**
கடைசி வாரம்
**சந்திரமுகி** (ரீலஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
15.07.2005 முதல் **கற்க கசடற**
(C-11381(12-17)



## மிருசுவில் துர்க்காபுரம் படித்த மகளிர் திட்டம் ஸ்ரீ ஞானதுர்க்கா அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

ஞான துர்க்கை அம்பாள் அடியார்களே!

ஆலய அலங்கார உற்சவம் நிகழும் பார்த்திப வருடம் ஆனி மாதம் 29 ஆம் திகதி (13.07.2005) புதன்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 22.07.2005 இறுதி நாள் தீர்த்த உறசவத்துடன் 10 நாள்கள் நடைபெறுகின்றன.

9 ஆம்நாள் விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்காதேவியின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறிநின்று துர்க்காதேவியின் வீதி உலாவுடன் சேர்ந்து வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். தினம்தோறும் காலை 10 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம்,பூஜை, திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலாவும் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் பங்குகொண்டு எல்லாம்வல்ல ஞானதுர்க்கா அம்மனின் பாதார விந்தத்தினைத் தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

இறைபணியே இன்பப்பணி

(37647) (14-17-25)

துர்க்காபுரம் ப.ம.திட்டம், மிருசுவில் பரிபாலன சபையினர். ஆலய தர்மகர்த்தா சிவத்திரு.சி.நவரத்தினஐயா.

## 45 நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 28 . 03 . 1997



விண்ணின் பிடியில் 29 . 05 . 2005

**சிறிஸ்கந்தராசா தேவப்பிரியா**

மின்னலென வந்தயமன் - தேவப்பிரியா
உன்னைப் பிரித்ததால் இன்னலுடன் ஆறாக
நீர் பெருக உன்னைத் தேடுகின்றோம்
எங்கையா சென்றாய்? - மீண்டும்
நீ எம்மடியில் தவழ இறைவனை வேண்டி
உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது புதல்வனின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்துதவிகள் செய்து ஆறுதல் வார்த்தைகள் கூறியோர்க்கும் கடிதம், தொலைபேசி, மூலம் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(37619) (14-17-25)

73/1, சந்தனமாதா கோயில் வீதி,
பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குழி.

இவரின் பிரிவால் கலங்கி நிற்கும்:
அப்பா, அம்மா, அண்ணா.

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 . 05 . 1921



மறைவு 12 . 06 . 2005

**அமரர் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**
*(இளைப்பாறிய வடபிராந்திய வீதிப் பரிசோதகர், போ.வ.ச)*

தாவடியைப் பிறப்பிடமாகவும் அவ்வூரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகம்மா, மாணிக்கம், இராசம்மா மற்றும் கனடாவில் வசிக்கும் நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் எமது குடும்பத் தலைவருமான அமரர் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை அவர்களின் மரணச் சடங்கின்போது நேரில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.07.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'உமாபதி',
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (37620) (14-17-25)

பிள்ளைகள்:
பொ.கமலநாதன், பொ.சந்திரநாதன்,
மருமகன்: ந.லிங்கேஸ்வரன்

## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் விஜயகுமார்



கோப்பாய் தெற்கு, இருபாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம்-விஜயகுமார் (கோப்பாய் விஜி-நிறைவேற்றுப் பணிப்பாளர், Nature Lanka Travels & Tours (Pvt) Ltd - Colombo-6) 10.07.2005 இல் கொழும்பில் காலமானார்.

அனனார் காலஞ் சென்றவர்களான சபாபதிப்பிள்ளை இராசரத்தினம் - ஞானேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் நாகலஷ்மியின் அன்புக் கணவரும் விமேஷ், லஷ்சிதா, விஜிதா, லஷ்மிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகபூரணி அம்மா, இராஜசேகரம், காலஞ்சென்ற ரவிந்திரகுமார், புஸ்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - தெய்வானப்பிள்ளை அவர்களின் மருமகனும் கிருஸ்ணசாமி, காலஞ்சென்ற கிருஸ்ணமூர்த்தி, கிருஸ்ணகோபால், கிருஸ்ணதேவன் நாகரத்தினம் நாகேஸ்வரி, நாகபூபதி, நாகபுஸ்பம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 12.07.2005 அன்று பொறளை ஜயவர்த்தனா மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளவத்தை,
கொழும்பு. (C/42011) (54-14-17-25)
T.P: 011-2585977, 0777515834.

தகவல்:-
ந. நாகபூசணி அம்மா
(சகோதரி - கிளி)

### திருமதி கந்தையா முத்துப்பிள்ளை



மந்துவிலைப் பிறப்படமாகவும், சரசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா முத்துப்பிள்ளை நேற்று (11.07.2005) திங்கட்கிழமை காலமானார்.

இவர் கணபதிப்பிள்ளை கந்தையாவின் அருமை மனைவியும் திருமகள் (ஆஸ்திரேலியா), திவாகரன் ஆகியோரின் பாசமிகு தாயும் றொபேட் (ஆஸ்திரேலியா) தவச்செல்வி (தொல்புரம்) ஆகியோரின் மாமியும் கோணஜேம்ஸ் (ஆஸ்திரேலியா), தாரணி (தொல்புரம்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொல்புரம் கிழக்கில் அன்னாரின் இல்லத்தில் இன்று (12.07.2005) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் தெற்கு பித்தனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செலலப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
விக்கினேஸ்வரா வீதி, சுழிபுரம். (37626) (54-14-17-25)

தகவல்:
T. தவச்செல்வீ (மருமகள்).

### சிவகுரு கந்தவனம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு கந்தவனம் அவர்கள் 11.07.2005 திங்கட்சிழமை நுணாவிலில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(37646) (54-14-17-25)

குருஸ்தான், பருத்தித்துறை வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

தகவல்:
க.சிவகுருநாதன் (மகன்).



உ
சிவமயம்

## பாஷாண உத்வாசன சபிண்டீகரண (கல்லெடுப்பு) அழைப்பு

**அன்புடையீர்!**

கடந்த 03.07.2005 பார்த்திப வருடம் ஆனிமாதம் 18ஆம் நாள் சனிக்கிழமை இரவு சிவபதமடைந்த எமது தந்தை

**சிவஸ்ரீ க. ஈஸ்வரக்குருக்கள்** அவர்களின்

பாசாண உத்வாசன (கல்லெடுப்பு) கிரியை 13.07.2005 பார்த்திப வருடம் ஆனித்திங்கள் 29ஆம் நாள் (13.07.2005) புதன்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறும். மறுநாள் (14.07.2005) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் சபிண்டீகரணமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாணம். (37648) (54-14-17)

மனைவி ஈ. நாகபூசணி அம்மா,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### மேல் கொத்மலைத் திட்ட சர்ச்சை

# நேரடியாக ஜனாதிபதியுடனேயே பேசி தீர்மானம் எடுக்க இ.தொ.க. முடிவு

மேல் கொத்மலைத் திட்ட விவகாரம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நேரடியாகப் பேசி முடிவெடுப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயற்குழு நேற்றுமுன்தினம் பண்டாரவளையில் கட்சித் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் தலைமையில் நடைபெற்றபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேல் கொத்மலைத் திட்டம் தொடர்பில் அரசு கோரியிருக்கும் கேள்வி மனுக்கள் குறித்து மேற்படி கூட்டத்தின்போது விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இ.தொ.காவுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஏற்பாடுகளை மீறும் வகையில் மேல் கொத்மலைத் திட்டத்திற்கான கேள்வி மனுக்கள் கோரப்பட்டுள்ளன என்றும், இது குறித்து கடும் எதிர்ப்பைத் தெரிவிப்பது என்றும்இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, இவ்விடயம் குறித்து ஜனாதிபதியுடன் தனியே பேச்சு நடத்துவதற்கும், ஏற்கனவே கோரப்பட்டுள்ள கேள்வி மனுக்களை மீளத் திருத்தியமைப்பதற்கு வழிகோலும் அமைச்சரவை நகலொன்றை நாளை அமைச்சரவையில் முன்வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக இ.தொ.காவின் சிரேஷ்ட உப தலைவர் ஆர்.யோகராஜன் நேற்றுத் தெரிவித்தார். (எ-க)

## போராளிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் ஏனையவர்களின் புகழுடல்களும் மக்கள் அஞ்சலிக்காக நேற்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வைக்கப்பட்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு வந்து போராளிகளுக்குத் தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர். தேசிய துணைப் படை வீரர் சின்னவனின் (அனுசன் குலவீரசிங்கம் 6ஆம் வட்டாரம், சாம்பல்தீவு) வித்துட திருகோணமலையிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

லெப்டினன்ட் கேணல் டிக்கான் அல்லது வேங்கையின் (செபஸ்தியாம்பிள்ளை ஜெயச்சந்திரன், 6ஆம் வட்டாரம், பெரிய குளம்) வித்துடல் அவரது வீட்டில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

2 ஆம் லெப்டினன்ட், இளம்புலியின் (தங்கராசா விஜேந்திரராசா) வித்துடல் 6ஆம் கட்டையில் அஞ்லிக்காக வைக்கப்பட் டுள்ளது.

நாட்டுப்பற்றாளர் பாபுவின் (முத்தையா கோணேஸ்வரன், அன்புவழிபுரம்)

புகழுடம்பு அன்புவழிபுரத்திலுள்ள அவரது வீட்டில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

நான்கு இடங்களிலும் அப்பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர்.

முற்பகல் 11 மணியளவில் நான்கு வித்துடல்களும் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டன. 6ஆம் கட்டையில் அவை இணைக்கப்பட்டு அங்கிருந்து ஒன்றாகக் கும்புறுப்பிட்டிக்கு எடுத்துச்செல்லப்பட்டன. அங்கும் அவை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

அங்கு அஞ்சலிக்கூட்டம் முடிந்ததும் வித்துடல்கள் ஊர்வலமாக நிலாவெளி, சல்லி, சாம்பல்தீவு ஆகிய இடங்கள் வழியாக மூன்றாம் கட்டையடிக்கு எடுத்துவரப்பட்டன. வழி நெடுகிலும் மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

சர்ச்சைக்குரிய புத்தர் சிலை அமைந்துள்ள இடத்திற்கு இட்டுச்செல்லும் எம்.ஸி. வீதியில் வைத்துப் பொலீஸார் வித்துடல்களை அவ்வழியாகக் கொண்டுசெல்லாது தடுத்தனர். அதனையும் மீறி மக்கள் வித்துடல்களோடு அதேவழியால் சென்று மூன்றாம் குறுக்குத்தெரு வழியாகப் பிரதான வீதியை அடைந்தனர்.

அங்கிருந்து பஸ்தரிப்பு நிலைய வீதியைக் கடந்து டொக்யாட் வீதிக்குக் கொண்டு செல்லப்பட்ட வித்துடல்கள் முற்றவெளி மைதானத்தில் வைக்கப்பட்டன.

முற்றவெளி மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஆர்.சம்பந்தனும், புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனும் இரகல் உரைகளை ஆற்றினர்.

அதன் பின் அங்கிருந்து சர்வதேச செஞ்லுவைச் சங்க வாகனங்களில் பிற்பகல் ஐந்து மணியளவில் போராளிகளினதும் துணைப் படை வீரரதும் வித்துடல்கள் சம்பூர் ஆலங்கேணி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைப்பதற்காக எடுத்துச்செல்லப்பட்டன.

நாட்டுப்பற்றாளர் பாபுவின் புகழுடல் இறுதிக்கிரியைகளுக்காக அன்புவெளிபுரத்தில் உள்ள அவரது இல்லத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

போராளிகள் உட்பட நால்வரினதும் கொலைகளைக் கண்டித்து மாவட்டத்தில் இன்று முழுக்கடையடைப்பு இடம்பெறவுள்ளது. திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை இந்தக் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்துள்ளது.

நேற்றைய அஞ்சலி நிகழ்வுகளையொட்டி திருகோணமலை நகர வீதிகள் எங்கும் பொலீஸாரும் படையினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்புத் தீவிரப்படுத் தப்பட்டிருந்தது. (எ-க)

## கொழும்பில் முடிகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுவட்டத்தில் திரும்பி, ஜேம்ஸ்பீரிஸ் மாவத்தை மற்றும் யூனியன் பிளேஸ் வீதியின் ஊடாகச் சென்று மாலை 4.30 மணியளவில் லிப்டன் சதுக்கத்தில் முடிவடையும்.

லிப்டன் சதுக்கத்தில் பொதுகூட்டம் ஒன்றும் நடைபெறும். இப் பொதுக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுவார்.

இவ்வருடம் டிசெம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாவிட்டால் அதற்கு எதிராக எதிர்காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி ரணில் விக்கிரமசிங்க அங்கு கூடியிருக்கும் மக்களுக்குத் தெரிவிப்பார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

இன்றைய இறுதிநாள் பாதயாத்திரைக் கான அனைத்து ஏற்பாடுகளையும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் மேற் கொள்கிறார் எனவும் அவர் தெரிவித்தார். (எ-க)

## புலிகளின் காலக்கெடுவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்தச் செய்தி இன்று செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்படுமென்று குறிப்பிட்ட அவர், இது தொடர்பான புலிகளின் பதிலைக் கண்காணிப்புக் குழு அரசாங்கத்திடம் தெரிவிக்குமென்றும் குறிப்பிட்டார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் தமது போராளிகளின் பயணப் பாதுகாப்புக் குறித்துத் திட்டவட்டமான பதிலை வழங்குமாறு தெரிவித்து அரசுத் தரப்புக்கு புலிகள் கடந்த 30 ஆம் திகதியன்று கொடுத்த இருவாரகால அவகாசம் நாளைமறுதினம் முடிவுற இருக்கையில் அரசின் செய்தியொன்று இன்று புலிகளுக்குக் கையளிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

அரசு தனது பதிலில் தெரிவித்திருக்கும் விடயங்கள் குறித்து அரசின் சமாதானச் செயலகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 26ஆம் திகதி கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்புக்கு இராணுவப் பாதுகாப்புடன் சென்ற புலிகளின் பயணத்தின்போது இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலுக்கு அரசு மீது புலிகள் சுமத்திய குற்றச்சாட்டை அரசு நிராகரிக்கின்றது.

அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதி ஊடாகப் புலிகளின் போக்குவரத்துக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்குவது இருதரப்புக்கும் இடையில் நம்பிக்கையைக்கட்டியெழுப்பும் நடவடிக்கையின் ஓர் அங்கமேதவிர, யுத்த நிறுத்த உடன்பாட்டின் கீழான ஒரு கடப்பாடோ உரிமையோ அல்ல என்பதை அரசு சுட்டிக்காட்டுகின்றது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாகப் புலிகளுக்கு அனுப்பிய பதிலில் அரசு கட்டுப்பாட்டுப் பகுதி ஊடான அத்தகைய போக்குவரத்துக்கான நடைமுறை ஒழுங்குகள் குறித்து அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்புக்கும், கிளிநொச்சியிலிருந்து திருகோணமலைக்கும் மாதத்துக்கு ஒரு சுற்றுப்பயண ஏற்பாடு குறிப்பிடப்பட்ட ஒழுங்குகளுக்கு அமைய செய்யப்படும் என அரசு விளக்கியுள்ளது.

புலிகள் பயணம் செய்யும் பஸ்களிலும் அதற்குப் பாதுகாப்பாகச் செல்லும் இராணுவ வாகனங்களிலும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களும் பயணம் செய்யவேண்டும் என அரசு கோரியுள்ளது.

- இப்படி அந்தச் செய்திக்குறிப்பில் தெரி விக் கப்பட்டிருக்கின்றது. (எ-க-13)

## ஆஸ்பத்திரிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படின் ஊழியர்கள் பயன்படுத்தும் வாயிலினூடாக வருவதற்கு அனுமதிக்கப்படுவதுடன், அவர்கள் தங்களது பெயர், விவரங்களை இதற்கென பாதுகாப்பு உத்தியோகத்தர் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் பதிந்துவிட்டுச் செல்ல முடியும். பின்பு பணிப்பாளரிடமோ நிர்வாக உத்தியோகத்தரிடமோ முன் அனுமதிபெற்று விடுதிகளுக்குச் செல்ல லாம். பணிப்பாளரோ நிர்வாக உத்தியோகத்தரோ கடமையில் இல்லாதபோது வெளிநோயாளர் பகுதியில் உள்ள வைத்திய உத்தியோகத்தரிடம் அனுமதி பெற்றுக்கொள் ளலாம்.

விடுதிகளில் வைத்தியர்கள், தாதிகள் நோயாளிகளைப் பராமரித்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களுக்கு அசௌகரியம் கொடுக்காவண்ணம் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இதன் மூலம் பத்திரிகை நிருபர்களுக்கும் ஊழியர்களுக்கு மிடையில் பிணக்குகள் ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ளமுடியும். (ஐ)

## போரைத் திணிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட வாகனம் சம்பவ இடத்திற்கு அருகிலிருந்த இராணுவச் சாவடியில் தங்குதடையின்றி பயணிப்பதற்கு இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தப்பட்ட முறை மற்றும் சம்பவ இடம் ஆகியவற்றை வைத்துப்பார்க்கும்போது இராணுவத்திற்குத் தெரிந்திருக்காமல் இச் சம்பவம் இடம்பெற வாய்ப்பேதும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் அவர்களுடன் இணைந்து இயங்கும் துணை ஆயுதக் குழுக்களுமே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். போர் நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முற்றிலும் முரணாக அதனை மீறும் வகையிலேயே இத்தாக்குத்ல் இடம்பெற்றுள்ளது.

கடந்த 08.07.2005 அன்று அம்பாறை மாவட்டத்தில் அரசியல் பணிபுரிந்து வந்த வெற்றிக்குமரன் என்ற போராளியை இராணுவப் புலனாய்வாளர்கள் கடத்திக் கொலை செய்ய முற்பட்ட வேளை பொதுமக்கள் திரண்டதை அடுத்து அப்போராளி அவர்களின் பிடியில் இருந்து தப்பிவந்தமை இங்கு குறிப் பிடத்தக்கது.

இவ்வாறாக அண்மைய நாள்களாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியில் ஈடுபட்டுவரும் எமது போராளிகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துவருகின்றன. தற்போதுள்ள குழப்பமான சூழ்நிலையில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவது போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஸ்திரத்தன்மைக்கே பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன. தமிழ்மக்களின் மத்தியில் அச்ச மும் குழப்பமும் ஏற்பட்டுள்ளது.

எமது போராளிகளும் மக்களும் தொடர்ந்தும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொல்லப்படுவதையும் காயப்படுத்தப்படுவதையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுவதையும் நாமோ, எமது மக்களோ தொடர்ந்தும் பார்த் துக்கொண்டு பொறுமை காப்பது சாத்திய மற்றது. போர்நிறுத்த சூழலைக் குலைத்து, போர்நிறுத்த உடன்பாட்டை முடித்துக் கொண்டு மீண்டும் ஒரு போர்ச் சூழலை எமது தேசத்தின்மீது திணிப்பதற்கான முழுமையான முயற்சிகளையோ இலங்கை அரசும் படைத்தரப்பும் எடுக்க முயல்கின்றனவோ எனத் தோன்றுகிறது. ஏனெனில், கடந்த காலங்களில் பலமுறை நாம் இது போன்ற நடவடிக் கைகளைச் சுட்டிக்காட்டியிருந்தும் எச்சரித்திருந்தும் அவை உதாசீனப்படுத்தப்பட்டு தொடர்ந்தும் எம்மீதும் எமது மக்கள் மீதும் கொலைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டு ஒரு நிழல் யுத்தம் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டு இக் கட்டத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தீர்க்கமானதும் உறுதியானதுமான முடிவுகளை எடுக்கவேண்டும் எனக் கேட் டுக்கொள்கின்றோம் - என்று உள்ளது. (எ-க)

## மூத்தலிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்டதாகவும், இந்த வாகனத்தைப் பயன்படுத்தி பொரலஸ்கமுவ, ரத்தனபிட்டிய பகுதியிலுள்ள இராணுவ அதிகாரி ஒருவரின் நடமாட்டத்தைச் சந்தேக நபர்கள் உளவு பார்த்தனர் எனவும் இரகசியப் பொலீஸார் மன்றில் தெரிவித்தனர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி சோபனா திருபாலசிங்கம்



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சோபனா திருபாலசிங்கம் அவர்கள் லண்டனில் அகாலமரணமானார்.

அன்னார் திருபாலசிங்கம் - அருள்நாயகி தம்பதிகளின் இரண்டாவது செல்வப் புதல்வியும் உமாசங்கர் (U.K), திருவருட்செல்வி (H.N.D.A உயர் தொழில்நுட்பக் கல்லூரி), பிருந்தா (நுண்கலை - யாழ்.பல்கலைக்கழகம்), பிரசன்னா (மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (13.07.2005) புதன் கிழமை நண்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, முற்றானை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.திருபாலசிங்கம் (தந்தை)

பழவீடு,
இளவாலை.

(37650) (25-15-17)

### செல்லத்துரை பிரான்சிஸ் பற்றிக்



புது வீதி, கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை - பிரான்சிஸ் பற்றிக் அவர்கள் நேற்று (11.07.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - மேரிதிரேசா (பாக்கியம்) அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் மீனாட் சியின் அன்பு மருமகனும் பாலாம்பிகையின் அன்புக் கணவரும், லக்ஷனி, மயூரனின் அன்புத் தந்தையும் தவேந்திரனின் அன்பு மாமனாரும் பிரணவியின் பேரனும் ஆவார். Sr.இனசென்சியாவின் (திருக்குடும்ப கன்னியர் மடம்) மருமகனும் இம்மானுவேல் (ராசு) செல்வமலர் (லண்டன்), மேசி (கனடா) காலஞ்சென்ற கபிரியேல் ஜெயராசா, றஞ்சிதமலர், வின்சென்ற் (கனடா), வசந்தி அவர்களின் அன்பு சகோதரனும் பரமேஸ்வரி (பிரான்ஸ்), சண்முகநாதன், அம்பிகாதேவி அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.07.2005) பி.ப.3.30 மணிக்கு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(37652) (25-15-17)

### சபாநாயகம் ரூபா

(துணைவி, சங்கரத்தை)

துணைவி, சங்கரத்தையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சபாநாயகம் ரூபா நேற்று (11.07.2005) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற சபாநாயகம் மற்றும் சரோஜினிதேவியின் அன்பு மகளும் தீபாசாந்தி (உப தபாலதிபர், நாகேந்திரமடம், அராலி) மயூரன் (யூ.என்.ஏச்.சீ.ஆர், மானிப்பாய்), ஐங்கரன் (பிள்ளையார் ரூர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜய கோபாலின் (முன்னாள் உரிமையாளர், ஈஸ்வரன் ஜுவல்லர்ஸ், கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்) பெறாமகளும் பொன்னம்பலம் இரத்தினஜோதி (பிரதம கப்பல் அதிகாரி, துறைமுக அதிகாரசபை,கொழும்பு), திருமதி பொன்னம்பலம் இரத்தினஜோதி (ஆட்பதிவுத் திணைக்களம், கொழும்பு) யின் மருமகளும் உதிஸ்ராவின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2005) செவ்வாய்க் கிழமை பி.ப.4.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அவறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விஜயகோபால், சரோஜினிதேவி
பெற்றோர்.

துணைவி,
சங்கரத்தை.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.